விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 புரட்டாதி 25 முஹற 15 இதழ் 239
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 11-10-84

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி, ஆணைக்குழுவுக்கு புகார்:

# வாசஸ்தலத்தில் இராணுவம் இருப்பதால் இடவசதியில்லை!

## பொருட்களையும் காணவில்லையாம்


[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறையிலுள்ள மாவட்ட நீதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திலிருந்த சுமார் 5 அயிரம் ருபா பெறுமதியான பொருட்களைக் காணவில்லை என்றும், இப்பொழுது அந்தவாசஸ்தலத்தில் இராணுவத்தினர் தங்கி இருப்பதால், நீதிபதிக்கு இடவசதி இல்லையென்றும் நீதிமன்ற ஆணைக்குழுவுக்குப் புகார் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

கடந்த 2ம் திகதி உத்தியோகபூர்வமாகக் கொழும்பு சென்றிருந்த பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு ரி. ஜோகநாதன் நேற்றுக்காலை பருத்தித்துறைக்குச் சென்றிருந்தார். பின்னர் தங்கியிருக்கும் உத்தியோக வாசஸ்தலத்திற்கு நீதிவான் நீதிமன்ற நீதவான்

(5ம் பக்கம் பார்க்க)

வடமராட்சி மாணவர்களின் உண்ணுவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து யாழ்.நகர கல்லூரி மாணவர்களின் அடையாள உண்ணுவிரத காட்சிகள். முதற்படத்தில் மாணவிகளில் ஒருபகுதியினரையும் இரண்டாவது படத்தில் மாணவர்களில் ஒருபகுதியினரையும் காணலாம்.



படங்கள்: 'தேவா'

# பிரிகேடியர் அளித்துள்ள உறுதி!

பாடசாலைக்கு பாடப்புத்தகங்களுடன் படிக்கச் செல்லும் மாணவர்கள் எவரும் அவசியமின்றி கைது செய்யப்படமாட்டார்கள் என்றும், பிரசுரங்களை வைத்திருந்தாலோ அல்லது அவற்றை ஒட்டும்போதோ கைது செய்யப்படும் மாணவர்கள் நேரே அதிகாரிடம் அழைத்துச் செல்லப்பட்டு கைது செய்யப்பட்டதற்கான காரணம் தெரிவிக்கப்படும் என்றும் யாழ். மாவட்ட இணைப்பு அதிகாரி திரு. நளின் செனவிரத்தன யாழ். அரசாங்க அதிபருக்கு நேற்றிரவு மீண்டும் உறுதியளித்துள்ளார்.

(5ம் பக்கம் பார்க்க)

## மாணவர் நடத்திய ஊர்வலம்

(கா. யோகநாதன்)

யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரிகளை சேர்ந்த சுமார் 5000 மாணவ, மாணவிகள் நேற்றுப் பிற்பகல் உண்ணுவிரதத்தை முடித்தபின் சுலோக அட்டைகளுடன், கோஷமெழுப்பியபடி ஊர்வலமாகச் சென்று பாதுகாப்புக் கோரி யாழ் கச்சேரியைச் சுற்றிவளைத்து முற்றுகையிட்டு, யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்திடம் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தனர்.

மகஜரில் உள்ள கோரிக்கைகளை மேலிடத்துடன் தொடர்பு கொண்டு நிறைவேற்ற முயற்சி செய்வதாக அரசாங்க அதிபர் உறுதியளித்தார்.

நேற்று பிற்பகல் 3-30 மணி

[5ம் பக்கம் பார்க்க]

## சர்வகட்சி மாநாடு இறுதிக்கட்டம்

ஜனாதிபதி தகவல்

[கொழும்பு]

சர்வகட்சி மாநாடு இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டதாகவும் விரைவில் நல்லமுடிவு ஏற்படும் என்று நம்புவதாகவும் ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று நடந்த பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சர்வகட்சி மாநாடு அனேகமாக டிசம்பர் மாதம் முடிவுக்கு வந்துவிடும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

### உணவு முத்திரை கிடைக்கும்

[கொழும்பு]

உணவு முத்திரைத்திட்டம் தொடர்ந்து இருக்கும் என்று

(5-ம் பக்கம் பார்க்க)

## இரண்டு சடலங்கள்

[யாழ்ப்பாணம்]

இரண்டு இளைஞர்களின் சடலங்கள் நேற்றிரவு யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில்வைக்கப்பட்டது

லொறி ஒன்றில் இந்தச் சடலங்களை ராணுவத்தினர் கொண்டு வந்தனர்.

## 40,000 மாணவர் உண்ணுவிரதம்

(ஏ. வி. மாணிக்கம்)

வடமராட்சி மாணவர்களின் உண்ணுவிரதத்திற்கு ஆதரவு தெரிவித்து யாழ். மாவட்டத்தில் நேற்றுக்காலை பரவலாக, பாடசாலை மாணவ மாணவிகள் அணி அணியாகத் திரண்டு ஆலயங்களில் இருந்து உண்ணுவிரதம் அனுஷ்டித்தனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள

(5-ம் பக்கம் பார்க்க)

### மாவிட்டபுரத்தில்

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை கல்விவட்டாரத்தைச் சேர்ந்த சுமார் 3,000 மாணவர்கள் நேற்றுக் காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்முன்றலில் உண்ணுவிரதம் அனுஷ்டித்தனர்.

யாழ் மாணவர் ஒன்றியத்தின் வேண்டுகோளுக்கிணங்க தெல்லிப்பளை மகாஜனகல்லூரி, யூனியன்கல்லூரி, காங்

(5 ம் பக்கம் பார்க்க)

### ஊர்காவற்றுறையில்

[வேலணை]

வேலணை கல்விவட்டார பிரிவிலுள்ள பாடசாலை மாணவர்களின் உண்ணுவிரதம் சரவணை சின்னமடு தேவாலயத்திலும், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் தேவாலயத்திலும் நேற்று நடைபெற்றது

[5ம் பக்கம் பாாக்க]

### சாவகச்சேரியில்

[சாவகச்சேரி]

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்தையும், அதிரடிப் படையையும் உடனடியாக வாபஸ் பெறவேண்டும் எனவும் ஹாட்லிக் கல்லூரி நூல் நிலைய எரிப்பு யாழ் இந்து மாணவர்

[5ம் பக்கம் பார்க்க]

### நேற்றுடன் முடிந்தது

(கரவெட்டி)

வடமராட்சி மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த உண்ணுவிரத போராட்டம் நேற்றுடன் முடிவுற்றது

கட்டம் கட்டமாக மூன்று நாட்களுக்கு அனுஷ்டிக்கப்படடுவந்த உண்ணுவிரத

[5ம் பக்கம் பார்க்க]

## குடத்தனை கொலைவழக்கு; எதிரிக்கு மரணதண்டனை

(யாழ்ப்பாணம்)

குடத்தனை கொலை, கொள்ளைவழக்கில் எதிரிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ்.மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசிர்வாதம் முன்னிலையில் 6 தினங்களாக நடைபெற்று நேற்றுத்தீர்ப்பளிக்கப்பட்டது

இவ்வழக்கில், 1981 அக்டோபர் 10-ம் திகதி குடத்தனை மணற்காடு என்ற இடத்தில் செல்லக்கிளி தனபாலசிங்கத்தை கொலை செய்ததாகவும், அதே நேரம் அதே

(5ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சுன்னுகம் கந்தரோடை ரோட்டில் முப்பது பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: தி. திருச்சிற்றம்பலம், தரைமன் கலட்டி, ஆனைக்குட்டி லேன். தெல்லிப்பழை. (124)

17A மணல்தரை லேன், கந்தர்மடத்தில் 1¾ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. கிணறுப் பங்கு, திருநெல்வேலி சிவன் கோவில் ரோட், மணல்தரை லேன், இரு பக்கத்தாலும் ஒழுங்கை உண்டு. நவா எம்போறியம் 16, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம். 119

அரியாலை பூதாதே கோவிலுக்கு அருகாமையில் 2 பரப்பு மேட்டுக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். L. இம்மானுவேல். 43, மாட்டின் ரோட், யாழ்ப்பாணம். (130)

## தேவை

பிடவை வியாபாரத்தில் நல்ல அனுபவமுள்ள விற்பனையாளர்கள் தேவை, சீமாட்டி, 122, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (120)

பிரயாணப் பைகள் (ரவலிங் பேக்) தைப்பதில் அனுபவம் வாய்ந்த பெண்களும், தையல் வேலையில் அனுபவம் வாய்ந்த பெண்களும் உடன் முழு விபரத்துடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 128, C/o ஈழநாடு. (128)

**வியாபாரம் செய்க விளம்பரம் பெருக**

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற ஆறுமுகம் சிதம்பரப்பிள்ளை, (புலோலி) என்பவரின் மரணசாதனத்தின் / மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

— மரணமெய்தியவர்

ஆறுமுகம் சிதம்பரப்பிள்ளை கைம்பெண் சரஸ்வதி, புலோலி தெற்கு, புலோலி.

— மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் } இல. 1210/T

எதிர்

1. சிதம்பரப்பிள்ளை தங்கராசா,
2. சிதம்பரப்பிள்ளை தங்கத்துரை,
3. சிதம்பரப்பிள்ளை தங்கயோகன்,
4. சிதம்பரப்பிள்ளை மகள் தங்கரத்தினம்
5. சிதம்பரப்பிள்ளை மகள் தங்கேஸ்வரி,
6. சிதம்பரப்பிள்ளை தங்கேஸ்வரன் எல்லோரும் புலோலி தெற்கு, புலோலி.

— எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலேபெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனத்தைஎண்பிப்பதற்காக/ மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 16-ஆந் நாளன்று முற்பகல் 10-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ருர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,

**றிச்சேட்**
**ஜெயராசசிங்கம்.**
ஒப்பம்
பதிவாளர்

ஆக்கம்;
இராமசுவாமி சதானந்தன்,
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்,
புலோலி தெற்கு, புலோலி.

10-

## 1-வது ஆண்டு
# நினைவஞ்சலி
## செல்வி விமலாதேவி (சிவா) இராமலிங்கம்

தோற்றம்: 09 | 10 | 1955



மறைவு: 23 | 09 | 1983

எங்கள் அன்பின் சிவா!

யாவரையும் ஆருத்துயரத்தில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயரத் துன்பக்கடலில் மூழ்கடித்துவிட்டு காலன் உன்னைக் கவர்ந்துவிட்டான்.

சிவா! சிவா! என நித்தம் அழைத்த குரலுக்கு குரல் கேட்டு ஓடிவருவாயே?

இன்முகத்தை இனி எங்கே காண்போம்.

எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு கழிந்தாலும் உமது நினைவுகள் என்றும் எம்மை விட்டகலாது.

நினது ஆத்மா சாந்தியடைய அன்ருடம் பிரார்த்திக்கும்

**தந்தை, தாய், சகோதர சகோதரிகள்.**

கல்லூரி வீதி, கொக்குவில். (95)

# காங்கேசன்துறைக்கு கப்பல்கள் வருவதில் தாமதமும், தடையும்!
## துறைமுகத் தொழிலாளர் கஷ்டம்!!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறைத் துறைமுகத்திற்குப் பொருட்களை ஏற்றிவரும் கப்பல்களின் வருகையில் தாமதமும், சிலசமயங்களில் தடையும் ஏற்படுவதால் துறைமுக வேலையை நம்பிவாழும் பெருந்தொகையான தொழிலாளர்கள் பெரிதும் கஷ்டமுறுவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன்துறை லங்கா சிமெந்து லிமிட்டெட்டின் துறைமுகம் அமைக்கப்பட்ட பின்னர் காங்கேசன்துறைக்கு அடிக்கடி கப்பல்கள் வந்துகொண்டிருந்தன. வடபகுதிக்கு வேண்டிய உணவுப் பொருட்களும், சிமெந்து ஆலைக்குத் தேவையான நிலக்கரி, ஜிப்சம் ஆகியனவும் இக்கப்பல்களில் கொண்டுவரப்பட்டன.

ஆனுல் அண்மைக்காலமாகக் கப்பல்கள் கிரமமாக இங்கு வந்து பொருட்களை இறக்கிச் செல்லமுடியாத சூழ்நிலைநிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஜிப்சம் ஏற்றிவந்த இந்தியக்கப்பல் ஒன்று அதனை இறக்காமலேயே திரும்பிச் சென்றது. பின்னர் மாக்கப்பல் ஒன்று வந்து துறைமுகப் பகுதிக்குள் வரத் தடை விதிக்கப்பட்டதால் சில தினங்கள் துறைமுகத்திற்கு வெளியே தரித்துநின்று பின்னர் ஒருவாறு அனுமதிபெற்று மா இறக்கப்பட்டது.

இந்தவாரம் ஜிப்சத்தை ஏற்றிக்கொண்டு கப்பல் ஒன்று காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வருமென எதிர்பார்க்கப்பட்டு இறக்குமதி வேலைகளுக்கான துரித ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டபோதும் அந்தக் கப்பல் வருமா என்பதுபற்றி இன்னமும்சரியாகக் கூறமுடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடல்பகுதியில் நிலைகொண்டுள்ள கடற்படையினரின் நடவடிக்கைகளால் ஏற்பட்டுள்ள இச்சூழ்நிலை காரணமாகக் கப்பல்களின் வருகையில் தாமதமும், சில சமயம் தடையும் ஏற்படுவதால் துறைமுகவேலையில் ஈடுபடும் தொழிலாளர்கள் பெரிதும் கஷ்டமுறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துறைமுகத் தொழிலாளர்களின் குடும்பங்கள் வறுமை நிலைக்குத்தள்ளப்பட்டு வருவதாகவும், இந்நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்துக் கப்பல்கள் ஒழுங்காக வந்துசேர ஆவன செய்யப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்படுகிறது.

## இசைக்கல்லூரி பூரணமானதாக இல்லை!

(மட்டக்களப்பு)

''மட்டக்களப்பு விபுலானந்தர் இசை நடனக்கல்லூரி பூரணத்துவமான கல்லூரியாக இயங்குவதில்லை. இந்நிலையில் மாணவிகள் பல சிரமங்களை அடைகிருர்கள்.''

இவ்வாறு மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரேதேச சபைக் கூட்டத்தில் உரையாற்றிய புளியந்தீவு கிராமோதய சபைத் தலைவர் திரு. ம. சிவநேசராசா புகார் தெரிவித்தார்.

சபையின் தலைவர் திரு. ரி. இராஜேஸ்வரன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

## இந்திய கிரிக்கெட் குழு பாகிஸ்தான் புறப்பட்டது!

[பம்பாய்]

சுனில் கவாஸ்கர் தலைமையிலான 16 பேர் கொண்ட இந்தியகிரிக்கெட் கோஷ்டி நேற்றுப் பம்பாயில் இருந்து பாகிஸ்தானுக்குப் புறப்பட்டது.

இந்தக் கோஷ்டி பாகிஸ்தானில் 3 டெஸ்ட் போட்டிகளிலும், 3 ஒருநாள் சர்வதேசப் போட்டியிலும், மற்றும் இரண்டு போட்டிகளிலும் கலந்துகொள்ளும் இக்குழு ஒருமாத காலம் அங்கு தங்கியிருக்கும்.

## 'இராசு' நிராகரிக்கவில்லை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மண்முனை வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இவ்வருடம் புனரமைப்புச் செய்யப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள் எதையும் தொகுதி எம். பி. யான பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை நிராகரிக்கவில்லை.

கிராம அபிவிருத்தி அமைச்சின் உத்தரவின் பிரகாரம் புனரமைப்புச் செய்யப்படும், புதிதாக அங்குரார்ப்பணம் செய்யப்படும். கிராம அபிவிருத்தி, மாதர் சங்கங்கள் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரின் அங்கீகாரம் பெறவேண்டும்.

இதன்பிரகாரம் மட்டக்களப்புத் தொகுதியில் 85 சங்கங்கள் அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட்டு எம். பியால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

## சரியானபெயர் வயாவிளான்

(கொழும்புத்துறை)

வசாவிளான் என்று அழைக்கப்படுவதை வயாவிளான் என்று திருத்திப் பாவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வயாவிளான் என்ற ஊரின் பெயர் வசாவிளான் என்று பிழையாகவே அழைக்கப்பட்டு வருகின்றது என்றும், இவ்வூர் மக்களின் குறைபாட்டைப் போக்குமாறும் வயாவிளான் கிராமசேவை அலுவலர் திரு. யோ அருளானந்தம் உரிய அதிகாரிகளை மகஜர்கள் மூலம் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஏற்கனவே, தபால் திணைக்களம் வயாவிளான் என்ற சரியான பெயரைப் பாவிப்பது என்று முடிவு செய்திருந்தும் இதுவரையும் நடைமுறைப் படுத்தப்படவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

### உடுத்துறை, ஆழியவளையில்
# பீரங்கி வேட்டுக்கள்: மக்கள் பீதி!

(பச்சிலைப்பள்ளி)

பருத்தித்துறை கிழக்கில் உள்ள கிராமங்களின் மீது கடந்த சிலதினங்களாக கடலிலிருந்து பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு வருவதையடுத்து அப்பகுதிமக்கள் பீதியடைந்துள்ளனர்.

உடுத்துறை, ஆழியவளை கிராமங்களின் மீது பிரயோகிக்கப்பட்ட பீரங்கி வேட்டுக்களையடுத்து கடற்கரைப் பகுதியிலுள்ள தென்னைமரங்களின் வட்டுக்கள் சரிந்துள்ளன.

இரவு நேரங்களில் பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்படும்போது மக்கள் பீதியினுல் வீட்டைவிட்டு குழந்தைகளுடன் வெளியே ஓடுவதாகக் கூறப்படுகிறது.

## வடபகுதியில் வெங்காய விலை வீழ்ச்சி

(பச்சிலைப்பள்ளி)

வட பகுதியில் வெங்காயத்தின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

ஒரு கிலோ சின்னவெங்காயம் தற்போது 14 ரூபாவாக சந்தையில் விற்பனை செய்யப்படுகிறது. பம்பாய் வெங்காயம் 1 கிலோ 9 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

தற்போது உள்ளூர் வெங்காயங்கள் சந்தைக்கு வந்ததையடுத்தே வெங்காயத்தின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

# கசிப்புஉற்பத்தியை தடுக்க நடவடிக்கை

[மன்னுர்]

மன்னுர் மாவட்டத்தில் அதிகரித்துவரும் கசிப்பு உற்பத்தியையும், அதன் விற்பனையையும் தடுப்பதற்கான நடவடிக்கைகளை இளைஞர்கள் குழுக்கள் பரவலாக மேற்கொண்டு வருகின்றன.

இக்குழுக்கள் கசிப்பு உற்பத்தி செய்பவர்களின் வீடுகளுக்கும் நேரில்சென்று கசிப்பு உற்பத்தியையும், விற்பனையையும் நிறுத்துமாறு கோரிக்கை விடுத்து வருகின்றன.

மன்னுர் மாவட்டத்தின் சில பகுதிகளில் கசிப்பு உற்பத்தி விற்பனை ஆகியவற்றைக் கண்டித்து சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டுள்ளன.

## 'சிறுவர் கதைவேளை'

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகரசபையினல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ''சிறுவர் கதைவேளை'' என்னும் சிறுவர்கள் நிகழ்ச்சி நகரின் பலபாகங்களிலும் நடைபெற்று வருகின்றது.

இத்தகவலை இந்நிகழ்ச்சி தயாரிப்பாளரான மாஸ்டர் சிவலிங்கம் எமது நிருபரிடம் தெரிவித்தார்.

# "உலக அமைதியில் அமெரிக்காவுக்கு அக்கறை இல்லை!'

## கிழக்கு ஜெர்மனில் குரோமிக்கோ உரை!

பெர்லின், அக். 7

"உலக அமைதியை ஏற்படுத்துவதில் அமெரிக்காவுக்கு அக்கறையில்லை. இராணுவவலுப் பெறுவதே அதன் முக்கிய நோக்கம்" என்று சோவியத் வெளிநாட்டு அமைச்சர் திரு. அந்ரே குரோமிக்கோ தெரிவித்தார்.

கிழக்கு ஜெர்மனில் பெர்லின் நகரில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றிலேயே திரு குரோமிக்கோ மேற்கண்டவாறு கூறினார். திரு. குரோமிக்கோவின் இப்பேச்சு அண்மையில் அவரின் அமெரிக்க சுற்றுப்பயண விபரங்களை உள்ளடக்கியிருந்தது.

திரு. குரோமிக்கோ மேலும் தெரிவித்ததாவது:- "அமெரிக்காவுக்கு உலக அமைதியை ஏற்படுத்துவதில் அக்கறை இல்லை. மிகப் பெரும் இராணுவ பலத்தைக் கட்டியெழுப்புவதிலேயே அது ஈடுபட்டு வருகின்றது. தனது இந்த முயற்சியை மூடிமறைக்கும் வகையிலேயே ஆயுதப் பரிகரணப் பேச்சுக்கள் நடத்தத் தயாராவது போலவும், அவற்றில் தனக்கு அக்கறை இருப்பதுபோலவும் பாசாங்குசெய்கின்றது. ஆனல் உண்மையில் இராணுவ பலத்தைக் கூட்டும் வகையில் காலந் தாழ்த்தியே ராஜ்ய உத்திகளை அது கையாண்டு வருகின்றது.

ஆயுதப் பரிகரண நடவடிக்கைகளில் தனக்கிருக்கும் ஆர்வத்தை அமெரிக்கா வெளிப்படையாகத் தெரிவித்தால் சோவியத் யூனியன் பகிரங்கமாக, கண்ணியத்துடன் சமரசப் பேச்சுக்களை நடத்த முன்வரும்" என்றுர்.

இதேவேளை சோவியத் வெளிவிவகார அமைச்சர் திரு. அந்ரே குரோமிக்கோ அமெரிக்கத் தலைவர்களுடனும், ஐ.ந. விலும் நிகழ்த்திய பேச்சுக்கள் குறித்து கிரெம்ளின் ஆட்சிப் பீடம் அவரை வெகுவாகப் பாராட்டியுள்ளது.

திரு. குரோமிக்கோவின் அமெரிக்கப் பயணம் பற்றிய சோவியத்தின் அறிக்கையில், அமெரிக்காவுடன் எதிர்காலத்தில் சோவியத் பேச்சுக்களை நடத்தக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளதென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (கி)

## தட்டுப்பாடு நீங்கியது

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்தில் மலேரியா நோய் இரத்தப் பரிசோதனைக்கு மிகவும் அவசியமான கண்ணுடி சிலேட்டுகளுக்கு கடந்த மூன்று மாத காலமாக நிலவிவந்த தட்டுப்பாடு தற்போது நீங்கியுள்ளது.

யாழ். பிரதேச மலேரியாத் தடுப்பு இயக்க வைத்திய அதி

(·ம் பக்கம் பார்க்க)

## ★ சுவிஸ்ஸில் உள்ள இலங்கைத் தமிழரை திருப்பி அனுப்பவேண்டாம்!

### சுவிஸ் புதுடில்லி தூதரகத்திற்கு ஜனர்த்தனன் தந்தி

சென்னை, அக். 7

'சுவிற்சர்லாந்தில் அரசியல் அடைக்கலம் கோரியுள்ளஇலங்கைத் தமிழர்களை சுவிஸ் அரசாங்கம் மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பக்கூடாது' என்று தமிழக சட்ட மேலவை உறுப்பினர் இரா ஜனர்த்தனன் கேட்டுள்ளார்.

திரு ஜனர்த்தனன் தமது இக்கோரிக்கையைத் தந்தி ஒன்றின் மூலமாகப் புதுடில்லியிலுள்ள சுவிற்சர்லாந்து தூதரகத்திற்கு விடுத்துள்ளார்.

150 இலங்கைத் தமிழர்களை இலங்கைக்குத் திருப்பிஅனுப்ப சுவிஸ் அரசாங்கம் எடுத்த முடிவு வாபஸ்பெறப்படவேண்டும். அரசியல் புகலிடம் கோரியுள்ள இலங்கைத் தமிழர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டால் அங்கு அவர்கள் துன்புறுத்தப்படுவார்கள்.

கடந்த ஆண்டு 200 தமிழ் இளைஞர்கள் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசிலிருந்து இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட்டார்கள். அவ்விளைஞர்கள் கொழும்பில் ஜெர்மன் அரசின் பிரதிநிதிகளுக்கு முன்பாகவே கைதுசெய்யப்பட்டுத் துன்புறுத்தப்பட்டார்கள் என்றும் திரு ஜனர்த்தனன் தமது தந்தியில் குறிப்பிட்டுள்ளார். [கி]

## அமெரிக்காவிடம் இஸ்ரேல் பொருளாதார உதவி கோருகிறது!

### யூத சமூகத்தையும் எதிர்பார்த்து இஸ்ரேல் பிரதமர் யூ. எஸ். பயணம்!

ரெல்அவிவ், அக். 7

இஸ்ரேலில் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. புதிய அரசாங்கம் மக்களின் தேவைகளைச் சமாளிக்கமுடியாமல் இருக்கின்றது.

இஸ்ரேலியப் பிரதம மந்திரி திரு. சிமோன்பெரஸ் நிதி உதவி கோரி அமெரிக்காவுக்கு செல்லவுள்ளார். இவர் அங்கு அமெரிக்க அரசாங்கத்திடமும் அங்குள்ள செல்வந்த யூத சமூகத்திடமும் இஸ்ரேலுக்கு நிதியுதவி கோருவர் என்று கூறப்பட்டது.

அமெரிக்கா கடந்தகாலங்களில் இராணுவரீதியாகவே பெருமளவில் இஸ்ரேலுக்கு உதவியளித்தது. தற்போது இஸ்ரேலில் ஏற்பட்டுள்ள நிலைமை இங்கு சகல அரசு நடவடிக்கைகளையும் முடங்கச் செய்துள்ளது. எனவே பொருளாதாரரீதியாக இஸ்ரேல் அமெரிக்காவிடம் தற்போது உதவியை எதிர்பார்க்கின்றது.

அமெரிக்காவில் இஸ்ரேலிய யூத சமூகத்தவர்களே பெரும் செல்வந்தர்களாக நிதிவிடயங்களில் ஆதிக்கம்செலுத்துகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது (கி)

## ஹைதராபாத் வீதிகளில் பொலிஸார் உறக்கம்!

ஹைதராபாத் அக். 7

ஹைதராபாத் நகர பொலிஸார் பலர் கடந்த வாரம் அந்நகரின் பிரதான வீதிகளின் நடைபபாதைகளில் விடியற்காலை வேளை படுத்துறங்கிக்கொண்டிருந்ததைக் காணமுடிந்தது!

இக்காட்சியை வீதியில் சென்ற பாதசாரிகள் பலர் மிகுந்த அனுதாபத்துடன் பார்த்துச் சென்றனர்.

கடந்த வாரம் ஆந்திராவின் ஹைதராபாத் நகரில் கலவரங்கள் இடம்பெற்றன. இவற்றை அடக்குவதற்கு பொலிஸார் இரவு பகலாக அந்நகர்ப் பகுதியில் சேவைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர்.

கண்ணயர முடியாது தமது கடமையை முடித்தபின்னரே அவர்கள் தாம் சேவையிலீடுபட்ட வீதிகளின் நடைப்பாதைகளில் தம்மை மறந்து உறங்கிவிட்டனர்.

விடியற்காலை வேளை சீருடை, சப்பாத்து, தொப்பிகளை அணிந்தபடி கையில் தடி, குண்டாந்தடி மற்றும் தற்காப்புச் சாதனங்களுடன் அந்த பொலிஸார் நன்கு குறட்டைவிட்டுத் தூங்கியதை பலர் அடக்க முடியாத சிரிப்புடன்—அதே வேளை அனுதாபத்துடன் பார்த்துச் சென்றனர். (கி)

## குடிநீர் விநியோகத் திட்ட வேலைகள்

[மட்டுவில்]

சாவகச்சேரி குடிதண்ணீர் விநியோகத் திட்ட வேலைகள் தொடர்ந்து சுறுசுறுப்பாக நடைபெறுகிறது.

1985ம் ஜுலை மாதத்திற்குள் எப்படியும் குடிதண்ணீர் விநியோகத்தை ஆரம்பிக்க வேண்டுமென்ற இலட்சியத்துடன் திட்டப் பொறுப்பதிகாரிகள் சுறுசுறுப்பாக இயங்கி வருகிறுர்கள்.

மீசாலையில் சாவகச்சேரி நகருக்கான குடிதண்ணீர் சேகரிப்பு தண்ணீர்த் தாங்கிகளின் வேலைகளும் ஆரம்பமாகியுள்ளன.

## இரவில் நடக்கும் குண்டுவீச்சுத் தாக்குதல்

# வீடுகளில் இருக்க மக்கள் அச்சம்!

(கொழும்புத்துறை)

செம்பியன் பற்று, தாளையடி, உடுத்துறை, கொடுக்குளாய்ப்பகுதிகளில் கடலிலிருந்து கடந்த சில தினங்களாகக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்று வருவதால் இப்பகுதிப் பொதுமக்கள் இரவில் வேறிடங்களுக்கு இடம் பெயர்ந்து செல்லுகின்றனர்.

இப்பகுதிக் கடலில் தினமும் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு வருகின்றனவாம். இக்குண்டுகள் மெதுவான சத்தத்துடன் தீப்பிழம்புகளாகக் கடலிலிருந்து குடியிருப்புக்களை நோக்கி வருகின்றனவாம்

இக்குண்டு வீச்சுத் தாக்குதல்களால் செம்பியன்பற்று, உடுத்துறைப் பகுதிகளிலுள்ள பல தென்னந் தோட்டங்கள் நாசமடைந்துள்ளன. இத் தென்னந் தோட்டங்களில் தென்னை மரங்கள் எரிந்தும், முறிந்து வீழ்ந்த நிலையிலும் காணப்படுகின்றன செம்பியன் பற்றிலுள்ள வீடொன்றும் கடலில் இருந்து வந்த குண்டினுல் தாக்குண்டதால் அவ்வீட்டுக்கூரை பலத்த சேதமடைந்தது

தொடர்ந்து நிகழும் இக்குண்டு வீச்சுச்சம்பவங்களினுல் கடற்கரைப் பகுதிகளில் வாழும்மக்கள் பீதியினல் இரவு வேளைகளில் பாதுகாப்பான வேறிடங்களுக்குச் சென்றே தங்கி வருகின்றனர்.

கடலில் மீன்பிடி வலைகளும் அறுக்கப்பட்டுச்சேதப்படுத்தப்பட்டு வருவதாகவும் இதனுல் மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் சல்ல அஞ்சுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## "தாவர உணவினுல் மனிதாபிமானம் நன்கு பெருக்கமடைகிறது!"

### ருக்மணிதேவி அருண்டேல் கூறுகிருர்

சென்னை, அக் 7

"தாவர உணவுகளை உண்பதல் மனிதாபிமான உணர்வுகள் பெருக்கமடைகின்றன" என்று பிரபல இந்தியப் பிரமுகரும் பழம்பெரும் நாட்டியக் கலைஞருமான திருமதி ருக்மணி தேவி அருண்டேல் தெரிவித்தார்

நேற்று சென்னையில் 'உலக தாவர உணவு தினம்' கொண்டாடப்பட்டது இவ்வைபவத்தின் போதே சென்னை தாவர உணவுச் சங்கத் தலைவியான திருமதி ருக்மணிதேவி அருண்டேல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது.- 'சகல உயிர்களும் சமமாக மதிக்கப்பட வேண்டும் இத்தகையசமத்துவ உணர்வை தாவர உணவுகள் மனிதர்களுக்கு ஊட்டுகின்றன

கொல்லாமையை மனிதரிடத்தில் உருவாக்குவதுடன் அன்பு நெறியையும் தாவர உணவுகள் தோற்றுவிக்கின்றன

தாவர உணவு மனிதாபிமான உணர்வுகளைப் பெருக்குவதுடன், மனிதனின் அடிப்படை உணர்ச்சிகளைக்கட்டுப்படுத்தவும்உதவுகின்றன என்றுர்

திருமதி சௌந்தரா கைலாசம் உரையாற்றுகையில், காந்தியடிகளின் தெய்வீகத் தன்மைக்கு சிறுவயது முதல் அவர் மாமிசத்தை வெறுத்ததே காரணம் என்றுர்

இவ்வைபவத்தில் பேசிய ஏனைய பேச்சாளர்கள் சீராக உடலை வைத்துக் கொள்ளவும் சிக்கனமாக வாழ்க்கையை நடத்தவும், மனித சமுதாயத்தை மேம்படுத்தவும் தாவர உணவுப் பண்டங்கள் பெரிதும் உதவுகின்றன என்று குறிப்பிட்டனர். [கி]

## யாழ். நகரில் தனியார் மருத்துவ போதனை ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

யாழ் ஆனைப்பந்தி உயர் கலைக் கல்லூரியில், விஜயதசமியன்று 27 மாணவருக்கு மருத்துவபோதனைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டதாக கல்லூரி இயக்குனர் திரு ஈ வி கார்த்திகேசு தெரிவித்தார்.

14 மாணவிகளுக்கும் 13 மாணவருக்கும் மருத்துவ போதனை ஆரம்பிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்

[க]

மணிவாக்கு

அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்.

— குறள்

# நமதுநோக்கு

## இந்திய அரசும் கூட்டணி முடிவும்

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவினால் கூட்டப்பட்ட சர்வகட்சி மகாநாட்டின் பெறுபேறுகளில் தமிழர் விடுதலைக் கூட்டணியும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் சகலவிதத்திலும் நம்பிக்கை இழந்துவிட்ட நிலையில் உள்ளன என்பது சமீபகாலத்தில் இக்கட்சிகள் வெளியிட்டுவரும் அறிக்கைகளும் அபிப்பிராயங்களும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. இருந்தபோதிலும் இந்த மகாநாட்டினால் சுமுகத் தீர்வு ஒன்று ஏற்படுவதற்குத் தாங்கள் முட்டுக்கட்டையாக இருந்துவிட்டதாகக் குற்றஞ்சாட்டப்படும் நிலைக்கு உள்ளாவதையும் அவர்கள் விரும்பவில்லை என்பதும் தெளிவு.

இதே வேளை, 1977-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து பெரும்பான்மை ஆதரவுடன்பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட கட்சி என்றவகையிலும், அரசியல் சட்டத்தின் 6-வது திருத்தத்தின் அடிப்படையில் விசுவாசப்பிரமாணம் எடுக்காத காரணத்தினால் மக்கள் பிரதிநிதிகள் என்ற அந்தஸ்து மக்கள் தீர்ப்புஇன்றியே அபகரிக்கப்பட்டுவிட்டவர்கள் என்ற முறையிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அரசியல் ரீதியில் எடுக்கும் முடிவுகளும் நடவடிக்கைகளும், தமிழர் சமுதாயத்தைப் பிரதிபலிப்பனவாகவும், தமிழ் மக்கள் மீது தாக்கங்களை ஏற்படுத்துபவனவாகவும்இருக்கின்றன என்பதை மறுக்கமுடியாது. இந்தநிலைமையில் இக்கட்சியினர் மிகுந்த நிதானத்துடனும், முன்யோசனையுடனும் செயல்படுவது ஒருபுறமிருக்க, அசசெயல்பாடுகள் மிகுந்தபொறுப்புணர்வுடன் மேற்கொள்ளப் படுபவையாக இருத்தல் வேண்டும் என்று கூறத்தேவையில்லை.

இந்த நிலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களில் முக்கியமான சிலர் அடிக்கடி இந்தியாவுக்குச் செல்வதும் அங்கு இலங்கை அரசைக் கண்டித்து அறிக்கைகள் விடுவதும் இங்கு அரசியல் வட்டாரங்களில் சலசலப்பை ஏற்படுத்துகின்றன. பத்திரிகைகள் கேலி செய்து சித்திரங்களையும், கருத்துக்களையும் வெளியிடுகின்றன.

ஒரு பத்திரிகையில் வெளியான கருத்துப் படம் ஒன்றில் தமிழ்நாட்டில் உள்ள எரிபொருள் நிரப்பும் கருவியை திரு. அமிர்தலிங்கம் இயக்குவதுபோலவும், தமிழ் நாட்டைச்சேர்ந்த அரசியல்வாதி ஒருவர் அந்தக்கருவியின் குழாயை இலங்கையை நோக்கிப் பிடித்து எரிந்துகொண்டிருக்கும் இனப் பிரச்னை மீது பெட்ரோல் ஊற்றுவது போலவும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

சில மாதங்களுக்கு முன் ஜனாதிபதி ஜெயவர்த்தன இந்தியப் பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியின்போது திரு. அமிர்தலிங்கத்துடன் திருமதி இந்திரா காந்தி அடிக்கடி ஏன் பேச்சுநடத்துகிறார் என்று குறைபட்டுக் கொண்டார்.

இப்பொழுது வெளியாகியுள்ள ஒரு செய்தியின்படி இனிமேல் இந்திய அரசு நிர்ப்பந்தித்தால் மாத்திரமே இலங்கை அரசுடன் த. வி. கூட்டணி பேச்சு நடத்தும் என்று அக்கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது ஒரு விசித்திரமான சூழ்நிலை!

இலங்கையில் இரு இனங்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள ஒரு பிரச்னை - அது இங்கேயேதீர்க்கப்படவேண்டும் என்பதில் எவருக்கும் சந்தேகம் வேண்டாம். ஆனால் அது நியாயமாகவும் நேர்மையாகவும் நடைபெற வேண்டும். பெரும்பான்மையோரான சிங்களவர்களிடமிருந்து நியாயம் கிடைக்காது-அதற்கான மார்க்கம் யாவுமே அடைக்கப்பட்டுவிட்டன என்ற நிலையிலேயே தீவிரவாத கோரிக்கைகளும், சிந்தனைகளும், போராட்டங்களும் ஆரம்பமாகின.

அரசும், அரச யந்திரமும் ஈவிரக்கமற்ற முறையில் செயல்பட ஆரம்பித்ததால் உயிருக்குப் பயந்த அநேகர்- சுமார் 40 ஆயிரம் பேர் இந்தியாவுக்குத் தப்பி ஓடிவிட்டார்கள். இன்னும் அநேகர் வேறு மேற்கத்திய நாடுகளில் அடைக்கலம் தேடிச் சென்றுள்ளனர்.

கடந்த வருடம் இலங்கையின் மூலைமுடுக்கெல்லாம் சாதாரண தமிழ்மக்கள்மீது நடத்தப்பட்ட அதிபயங்கரக் கொடுமைகளை யடுத்து இந்திய அரசு இந்தநாட்டின் இனப்பிரச்னையில் சுமுகமான தீர்வொன்றைக்காண்பதற்கு தனது நற்பணிகளைக் கொடுத்துதவ முன்வந்தது. அபயக்குரல் எழுப்பி அங்கு சென்ற தமிழ்ப் பிரதிநிதிகள் இந்திய அரசின் முயற்சியை ஏற்று இலங்கை அரசுடன் பேச்சுக்கள் நடத்த முன்வந்தார்கள்.

நிலைமை சிறிது சிறிதாகத் தணிந்தது. பேச்சுவார்த்தை நீடித்தது. வன்செயல்கள் வடக்குக் கிழக்கில் மாத்திரம் இடம்பெறும் வகையில் சூழ்நிலை வகுக்கப்பட்டது. அதுவும் நீடிக்கிறது.

சுமார் ஒருவருட காலம் பேச்சுக்கள் நீடித்தபோதிலும் தமிழ் மக்கள் விரும்பி ஏற்றுக்கொள்ளும் வகையில் தீர்வொன்று இன்னமும் ஏற்படவில்லை. பொதுவில் பேச்சுக்களால் எதுவிதப் பயனும் இல்லையென்ற விரக்தி நிலையே எஞ்சியுள்ளது. இந்த நிலைமையில் இந்திய அரசு தொடர்ந்தும் தமிழ்த் தலைவர்களைச் சர்வகட்சி மகாநாட்டில் கலந்துகொள்ளுமாறு வற்புறுத்தப் போகின்றதா? என்ற கேள்வி எழுவது இயற்கை.

மகாநாடு ஆரம்பமானபோது இருந்த மட்டத்திலிருந்து சிங்களத் தலைவர்களும், கட்சிகளும், ஒரு இஞ்சிதானும் விட்டுக்கொடுக்க மறுப்பதாயின் இந்த மகாநாட்டினால் எதுவித பயனும் இல்லை.

இதேசமயம் திரு. ஜெயவர்த்தன தாக்கல்செய்துள்ள சில யோசனைகளின் அடிப்படையில் சில சட்டப் பிரமாணங்களை உருவாக்குவதற்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

தமக்கென ஒரு பாரம்பரிய பிரதேசத்தையும், மொழியையும், கலாசாரத்தையும் கொண்ட மக்கள், இன்னொரு பிரிவினரால் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படும் எந்தவொரு அரசியல் முடிவையும் ஏற்க மாட்டார்கள். இது உலக சரித்திரம் காட்டும் உண்மை.

இதனை இன்றைய அரசியலார் இன்னமும் உணர்ந்து கொள்ளாமல் இருப்பது துர்ப்பாக்கியம். தமிழ் மக்கள் விரும்பி ஏற்கக்கூடிய ஒரு திட்டத்தை நியாய சிந்தையுடன் உருவாக்கி அதனைச் சிங்கள மக்களும் ஏற்கும்படிசெய்ய முடியுமானால் அது இந்த நாட்டின் வருங்கால நன்மைக்கு உதவக்கூடும்.

தற்காலிக அரசியல் நன்மையை மாத்திரம் கருதும் அரசியல்வாதிகளால் இது சாத்தியமாகாது.

இந்த இக்கட்டான நிலைமையில் இந்திய அரசு தொடர்ந்து எந்த வகையில் உதவமுடியும்?

---

# அமெரிக்கத்தளம் அமைந்துள்ள டியாகோ கார்ஷியாவுக்கு அருகே சோவியத் தளம்!

## இந்துசமுத்திர அமைதிப் பிரதேச தீர்மானத்துக்கு அரோகரா!

இந்துமகாசமுத்திரப் பகுதியை அமைதிப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தவேண்டுமென்ற தீர்மானம் ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்டு பதினன்கு வருடங்கள் முடிந்துவிட்டன.

ஆனால் இந்துமா சமுத்திரப் பகுதியை அமைதிப்பிரதேசமாகாக்குவதற்குப் பதிலாக வல்லரசுகள் அப்பகுதியைப் போட்டிபோட்டுக்கொண்டு இராணுவப் பலப்பரீட்சைக்குக் களம் அமைத்துவருகின்றன.

இந்துமகாசமுத்திரப் பகுதியை அமைதிப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தவேண்டுமென்ற தீர்மானத்தை ஐ.நா. வில் இலங்கைதான் கொண்டு வந்தது. அமைதிப்பிரதேச யோசனையை முதலில் முன்வைத்தவர் அச்சமயம் இலங்கையின் பிரதம மந்திரியாக இருந்த திருமதி சிறிமா பண்டாரநாயகா ஆவார்

1971-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஐ. நா. சபையின் 26-வது பொதுக்கூட்டத்தில் உரைநிகழ்த்துவதற்கு இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா சென்றிருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் அவர் இந்துமகா சமுத்திரப் பகுதியை அமைதிப் பிரதேசமாகப் பிரகடனப் படுத்த வேண்டுமென்ற யோசனையை முன்வைத்து ஆதரவும் திரட்டினர்.

இந்துமகா சமுத்திரப் பகுதியை அமைதிப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்த வேண்டுமென்ற தீர்மானத்தை ஐ. நா. சபையின் 26வது பொதுக் கூட்டத் தொடரில் ஐ. நா. 2832 வது தீர்மானமாக இலங்கை கொண்டுவந்தது. இத்தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு 1971ம் ஆண்டு நவம்பர் மாதம் 10ம் திகதி இடம்பெற்றது. இத்தீர்மானத்தை ஆதரித்து அறுபத்தியொரு உறுப்பு நாடுகள் வாக்களித்தன ஐம்பத்தி ஐந்து நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. வல்லரசு நாடுகளின் வரிசையில் நவசீன மட்டுமே இத்தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தது அமெரிக்கா சோவியத் யூனியன், பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய வல்லரசுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் மௌனம் சாதித்தன,

**எஸ். எம். ஜி.**

இந்த வல்லரசுகள் இந்து மகாசமுத்திரப் பகுதியை அமைதிப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்த வேண்டுமென்ற தீர்மானத்தை ஆதரிக்காததற்குரிய காரணம் பின்னர் வெளியானது

### டியாகோகார்ஸியா

இந்து மகா சமுத்திரப் பகுதியிலுள்ள டியாகோகார்ஸியா என்ற தீவு பிரிட்டனின் கட்டுப்பாட்டிலுள்ளது. இந்த தீவில் பிரிட்டனுடன் சேர்ந்து அமெரிக்கா தளம் அமைந்துள்ளது. 1974-ம் ஆண்டில் டியாகோகார்ஸியாவிலுள்ள தளத்தின் வசதிகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு பிரிட்டனும் அமெரிக்காவும் ஒப்புக்கொண்டிருப்பதாக அறிவிப்பு வெளியானது. இந்த அறிவிப்பைத் தொடர்ந்து இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா அமெரிக்க அதிபர் றிச்சார்ட் நிக்ஸனுக்கும் பிரிட்டிஷ் பிரதம மந்திரி எட்வர்ட் ஹீத்துக்கும் தனித்தனியாகச் செய்திகள் அனுப்பினர். டியாகோகார்ஸியா தீவிலுள்ள தள வசதிகளை மேலும் விரிவுபடுத்தும் அவர்களுடைய நடவடிக்கை அமைதிப்பிரதேச பிரகடனத் தீர்மானத்துக்கு எதிர்மாறான ஒரு செயற்பாடு மட்டுமல்ல சர்வதேச நெருக்கடியைத் தளர்த்தும் நோக்கத்தையுடைய முன்னேடி நடவடிக்கைகளைப் பின்தள்ளச் செய்யும் ஒருசெயலுமாகும் என்று கடுமையான ஆட்சேபனையைத் திருமதி பண்டாரநாயகா தமது செய்தியில் தெரிவித்திருந்தார். இந்த நடவடிக்கை இந்தப் பிரதேசத்தில் இராணுவ விஸ்தரிப்புக்கு வழிவகுத்து இப்பகுதிகளிலுள்ள நாடுகளுக்குத் தீங்கான விளைவுகளை ஏற்படுத்துவதுடன் பொதுவாக உலக அமைதிக்கும் தீமைக்கும் வழிவகுக்கும் என்றும் திருமதி பண்டாரநாயகா தெரிவித்திருந்தார்.

(ஆதாரம்:- 'தி சைனீஸ் கொனெக்ஷன்- காமினி நவரத்தின)

### இன்றைய நிலை

இன்று டியாகோ கார்ஸியா தீர்வு, இந்துமகாசமுத்திரப் பகுதியிலுள்ள நாடுகளைமட்டுமல்ல உலகநாடுகளையே அச்சுறுத்தும் அளவுக்கு வலுப்பெற்ற ஒருபெரும் தளமாக விஸ்தரிக்கப்பட்டு நிற்கின்றது.

டியாகோகார்ஸியாவில் மிக முக்கிய கேந்திரமாகக் கணிக்கப்படும் ஃபுளோற்றில்லா என்ற பகுதியில் அமெரிக்கத் தளம் மேலும் மேலும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது. சமீபத்தில் இப்பகுதிக்குச் சென்றிருந்த பிரிட்டிஷ் பத்திரிகை நிருபர் ஒருவர் இப்பகுதியிலுள்ள குதிரைலாடன் போன்ற வடிவிலான வாவியில் பதினன்கு பாரந்தூக்கிக் கப்பல்களும் எண்ணெய்த் தாங்கிக் கப்பல்களும் நிற்கக் காணப்பட்டனவென்றும், இக்கப்பல்களின் மேற்தளங்களில் கவச வண்டிகளும், ஏவுகணைகளும், போர் விமானங்களும் நிறைந்திருக்கக் காணப்பட்டனவென்றும் தெரிவித்திருப்பதாக அமெரிக்க சஞ்சிகையான 'நியூஸ் வீக்' ஒரு கட்டுரையில் தெரிவித்துள்ளது. இவற்றிற்கு அருகே அணு ஆயுதங்கள் பொருத்தப்பட்ட நீர்மூழ்கிகளும். இரண்டு பெரும் போர்க் கப்பல்களான 'கிறிஸ்றியும்' லாசாலேயும் நங்கூரமிட்டிருப்பதாகவும் அந்த நிருபர் அறிவித்திருக்கிறார்.

இந்த கால்வாயை அடுத்துள்ள ஓடுபாதையிலிருந்து நூற்றுக்கணக்கான குண்டு வீச்சு விமானங்களும் போர் விமானங்களும், வேவு பார்க்கும் விமானங்களும் அடிக்கடி பறந்து கொண்டிருக்கும் காட்சியையும் காணக்கூடியதாக இருக்கிறதாம்.

டியாகோகார்ஷியாவில் அமெரிக்கத்தளம் விஸ்தரிக்கப்பட்டு வருவது சோவியத் யூனியனுக்குப் பெருங்கவலைகொடுத்துள்ளதென்பதல் ஐயமில்லை. சோவியத் என்னசோனுசலமா இந்து மகா சமுத்திரப் பகுதியில் டியாகோகார்ஷயா தீவை அமெரிக்கா தனதுதளமமைக்க பயன்படுத்தினுல் அதற்கு அருகேயுள்ள சிசெல்ஸ் என்ற தீவை சோவியத் யூனியன் தான் தளம் அமைபபதற்கு பயன்படுத்தமுன் வந்துள்ளது.

டியாகோகார்ஷியாவுக்கும் ரிசெல்ஸ் தீவுக்கும் சுமார் 1000 மைல்,தான் இடைத்தூரம. ஒரு காலத்தில் டியாகோகார்ஷயாவும் மொரிஷியஸ் தீவுடன் இணைந்திருந்தது. சிசெல்ஸ் தீவும்மொறிஷியஸுடன் தான்இணைந்திருந்தது!

### இந்துக்களும் வாழும் சிசெல்ஸ்

பரப்பளவிலும் சனத்தொகையிலும் இலங்கையை விட மிகச்சிறிய தீவான சிசெல்ஸ் தீவில் வாழும்மக்களில்தொண்ணூறுவீதமானோர் றோமன் கத்தோலிக்கமதத்தைச் சேர்ந்தவர்கள். இந்துக்களும் முஸ்லிம்களும் இங்கு வாழ்கிறார்கள். இத்தீவில் ஆங்கிலம்தான் உத்தியோகமொழி! ஆபிரிக்க மொழியும் பிரஞ்சு மொழியும் புழக்கத்திலுள்ளன.

இத்தீவில் தெங்குப்பொருள்கள்தான் பிரதான உற்பத்திப் பொருள்களாகும். இங்குவரும் சுற்றுலாப் பயணிகளுக்கு முதல் முதலில் காட்சியளிப்பது ''தேங்காய் விழும் கவனம்'' என்ற எச்சரிக்கைப் பலகைகளாகும்.

[5ம் பக்கம் பார்க்க]

## மாணவர்கள் நடத்திய....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

க்கு உண்ணுவிரதம் முடிந்ததும் மாணவ, மாணவிகள் கண்டி வீதி வழியாக, கச்சேரிக்கு ஊர்வலமாகப் புறப்பட்டனர்.

வீதியோரத்தில் பெருந்திரளான மக்கள் நின்று பார்வையிட்டனர். வாகனப் போக்குவரத்துஎவ்விதத்திலும்தடைப்படாமல் ஊர்வலம் மிகவும் கட்டுப்பாட்டுடன் சென்றது.

கச்சேரி நிர்வாகப் பகுதிக் கட்டடத்தை மாணவ மாணவிகள், சுற்றி வளைத்து, ஒன்று திரண்டு, சுலோகங்களை கோஷித்தப்படியிருந்தனர். மாணவர்கள் கறுப்புப்பட்டி அணிந்திருந்தனர்.

சுமார் 10 நிமிடம் மாணவர்கள் வெளியில் நின்று கோஷமெழுப்பியதைத் தொடர்ந்து அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் மாடியிலிருந்து கீழே வந்து மாணவர்களைச் சந்தித்தார். அரசாங்க அதிபருடன் மாவட்ட அமைச்சு இணைப்பு அதிகாரியும், உதவி அரசாங்க அதிபருமான திரு. எஸ். பி பாலசிங்கம், பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. சண்முகசுந்தரமும் கீழே வந்தார்கள்.

அரசாங்க அதிபரைச் சுற்றி அங்கு திரண்டுநின்ற மாணவர் அமர்ந்து கொண்டனர். மாணவர் ஒருவர் அரசாங்க அதிபரின் சேட்டில் கறுப்புப்பட்டி அணிந்தார், மாணவ பிரதிநிதி ஒருவர் பருத்தித்துறையில் பொலிஸ் நிலையத்தையும் இராணுவத்தையும், வேறு இடத்திற்கு மாற்றி, கல்லூரிகளை உடன் ஆரம்பிக்க வேண்டும் என்று கூறினர்.

பாடசாலை நேரங்களில், பாடசாலை வீதிகளில் இராணுவ நடமாட்டம் இருக்கக்கூடாதென்றும், அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த ஜி சி ஈ(சாதாரணதரம்)மாணவர்களுக்கு 6 மாதமாகியும், இன்னும் அடையாள அட்டை கிடைக்கவில்லை என்றும் ஆதலால் மாணவர்களை, அடையாள அட்டை இல்லாத காரணத்திற்காக கைது செய்யக்கூடாது என்றும் மற்றொரு மாணவர் கோரினர்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி யாழ். இந்துச் கல்லூரி மாணவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மற்றொரு மாணவர் பிரதிநிதி கேட்டுக் கொண்டார்,

'மாணவர் கோரிக்கை வெள்ளிக் கிழமை நிறைவேற்றப்படாவிட்டால், மற்றொரு போராட்டத்தை முன்னெடுப்போம் என்றும், ஆனல் அதன் பின் கச்சேரிக்கு வரமாட்டோம் என்றும், தங்கள் பிணங்களைத்தான் காணமுடியும் என்றும், மாணவி பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

அன்னையர் முன்னணி உறுப்பினர் திருமதி எஸ் ஸ்ரீசரஸ்வதி பேசுகையில் பள்ளிமாணவர்கள் தங்கள் எதிர்கால வாழ்வுக்காக கச்சேரிக்கு வந்துவிட்டார்கள் என்றும் இனிமேல் தொட்டிலுள்ள குழந்தைகளும் கச்சேரிக்குத் தவழ்ந்து வரவேண்டிய கட்டம் நெருங்கிவிட்டதாகவும் கூறினர்.

அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் கூறியதாவது: பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி திருத்த வேலைக்கு 4 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு, ஒப்பந்தகாரர் அங்கு சென்று வேலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது.

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தையும், இராணுவத்தையும், வேறு இடத்திற்கு மாற்றுவதுபற்றி இங்கிருந்து சென்ற அதிபர்கள்குழு நாளை அமைச்சர் லலித் அத்துலத்முதலியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தும். வெள்ளிக்கிழமை இதுபற்றி முடிவு தெரிந்துவிடும்,

கைது செய்யப்பட்டுள்ள மாணவர்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொள்ள முயற்சிக்கிறேன்.

அடையாள அட்டை இன்னும் பெற்றுக்கொள்ளாத மாணவர், அதிபரிடம் அத்தாட்சிக் கடிதம்ஒன்றைபெற்று வைத்திருப்பது தொடர்பாக மேலிடத்துடன் தொடர்பு கொண்டு முயற்சிக்கிறேன்.

பாடசாலை நேரத்திலும், மாணவர், ரியூசனுக்கு செல்லும் நேரத்திலும், அப்பகுதி வீதிகளில், ஆயுதப்படையினர் நடமாட்டத்தைதவிர்ப்பதற்கு மேலிடத்துடன் தொடர்பு கொண்டு முயற்சிக்கிறேன்.

சுமார் 4-30 மணியளவில், மாணவ மாணவிகள் அமைதியாகக் கலைந்துசென்றனர். [க]

## வாசஸ்தலத்தில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. க. கணபதிப்பிள்ளையுடன் சென்று பார்வையிட்டார்

அக்கட்டிடத்தின் ஒரு பகுதி சேதமுற்றிருப்பதுடன், மற்றைய பகுதிகளின் கண்ணுடிகள் நொறுக்கப்பட்டிருந்ததாகவும், சேதமடையாத பகுதியில் இராணுவத்தினர் தங்கி இருப்பதாகவும், பாதிக்கப்படாத அறைக்குள்ளிருந்த கசட்ரேடியோ, மற்றும் உடுப்புவகைகள், தளபாடங்களைக் காணவில்லை என்றும் நீதிமன்ற ஆணைக்குழுவுக்கு நீதிபதி புகார் தெரிவித்துள்ளார்,

வாசஸ்தலத்தில் இருந்த பொருட்கள் சம்பந்தமாக அங்கிருந்த இராணுவ பொறுப்பதிகாரியுடன் நீதிபதி தொடர்பு கொண்டு விசாரித்த போது, நீதிபதியின் படுக்கையும், நீர் சூடாக்கும் கருவி மற்றும் கதிரைகளைத் தாம் பாதுகாப்பில் எடுத்து வைத்திருப்பதாகவும், ரேடியோ, உடுப்பு வகைகள் பற்றி தமக்குத் தெரியவில்லை என்றும் கவலையுடன் தெரிவித்தாராம். (மா)

## குடத்தனை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இடத்தில் செல்லக்கிளியிடம் 350 ரூபா பெறுமதியான காதணியையும், 150 ரூபா பணத்தையும், பயங்கர ஆயுதமாகிய சூலத்தால், தாக்கி கொள்ளையடித்ததாகவும் ஆழ்வான் சரஸ்வதியை சூலத்தால் குத்தி கொலை செய்ய முயற்சித்ததாகவும், சரஸ்வதியின் உடம்பிலிருந்த 400 ரூபா பணத்தை கொள்ளையடித்ததாகவும், கோபால் வேணுகோபால் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

ஜூரிசபையினர், 4 குற்றச் சாட்டுகளிலும் எதிரியைக் குற்றவாளி என ஏகமனதாகத் தீர்ப்பளித்தனர்.

இதைத் தொடர்ந்து நீதிபதி முதலாவது கொலைக்குற்ற சாட்டிற்கு மரண தண்டனை விதித்தார், 2-வது கொள்ளைக் குற்றசாட்டிற்கு 2 வருடக் கடூழியச் சிறைத்தண்டனையும், 3-வது கொலைமுயற்சி குற்றச் சாட்டிற்கு 10 வருட சிறையும் 1000 ரூபா அபராதமும் விதித்து அபராதம் கட்டத்தவறினல் 6 மாத சிறையும் விதித்தார். நான்காவது கொள்ளை குற்றத்திற்கு 2 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

அரச தரப்பில் அரச சட்டத்தரணி ஸ்ரீஸ்கந்தராசா வழக்கை நடத்தினர். (க)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் - கறீன் பீல்ட் கழகத்துக்குமிடையில் சினேகபூர்வமான உதைபந்தாட்டப்போட்டி இன்று மாலை சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (வி)

## உணவு முத்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனதிபதி தெரிவித்துள்ளார்.

300ரூபாவுக்கு குறைவான வருமானம் பெறுபவர்களுக்கு இவை தொடர்ந்து வழங்கப்படவுள்ளது.

## பிரிகேடியர்.....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கச்சேரியை முற்றுகையிட்டு நேற்று மாலை மாணவர்கள் சமர்ப்பித்த கோரிக்கைகள் தொடர்பாக யாழ். அரச அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் நேற்றிரவு யாழ். மாவட்ட இணைப்பு அதிகாரியுடன் தொடர்பு கொண்டார். அப்போதே அவ்வாறு உறுதியளிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

அடையாள அட்டை இல்லாத மாணவர்கள் புகைப்படத்தை அதிபர் மூலம் அத்தாட்சிப்படுத்துவதுடன் 34ம் ஆண்டில் எந்த வகுப்பில் படிப்பதான கடிதம் ஒன்றையும் வைத்திருக்க வேண்டும் என்று அவ்வாறு வைத்திருப்பவர்கள் கைது செய்யப்படமாட்டார்கள் என்று அவர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டுள்ள மாணவர்களை விரைவில் விதலை செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் உறுதியளித்ததாக அரச அதிபர் நேற்றிரவு தெரிவித்தார்.

## 40,000 மாணவ....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

13 கல்வி வட்டாரங்களிலும் மாணவர்களால் உண்ணுவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

சுமார் 40 ஆயிரம் மாணவர்கள் உண்ணுவிரதத்தில் கலந்து கொண்டனர்.

அவ்வவ் கல்வி வட்டாரங்களிலும் உள்ள பல பாடசாலை மாணவர்கள் சீருடையுடன், கறுப்புப் பட்டியும் அணிந்து, சுலோக அட்டைகளுடன் அமைதியாக ஊர்வலமாகச் சென்றுஉண்ணுவிரதத்தில் ஈடுபட்டனர்.

யாழ், கல்வி வட்டாரத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் உண்ணுவிரதம் இருக்க ஏற்கனவே தீர்மானித்திருந்த போதிலும். அந்த மைதானத்தைச் சுற்றி வர ஆயுதப்படையினரின் நடமாட்டத்தைக் கண்டு. சென் ஜேம்ஸ்தேவாலயத்தின் முன் வெளிக்கு பகுதி பகுதியாக ஊர்வலமாகச் சென்றடைந்தனர்.

சுமார் 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் இங்கு குழுமியிருந்தனர்.

கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் காலை 10 மணி தொடக்கம் 3-15 மணிவரை இருந்த இடம்விட்டு நகராமல் அமைதியாக கோஷங்களை எழுப்பியும் பிரார்த்தனை செய்வதிலும் ஈடுபட்டிருந்தனர்

வெய்யில் அகோரத்தினுல் தாகம் ஏற்பட்டு நாவறண்டு உதடுகள் காய்ந்து பேசமுடியாதளவுக்கு மாணவர்கள் சோர்வடைந்து காணப்பட்டனர்.

அனேகமான மாணவ-மாணவிகள் மயக்கமடைந்த நிலையில் காணப்பட்டபோதிலும், அவர்கள் எதுவித சிகிச்சைக்கும் உடன்பட பின்னர்மறுத்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிற்பகல் மூன்றுமணியளவில் கிறிஸ்தவ தொண்டர் ஸ்தாபனம் ஒன்று குளிர்பானம் கொடுத்து உண்ணுவிரதத்தை முடித்துவைத்தது.

வடமராட்சி மாணவர்கள் தொடர்ச்சியாக அனுஷ்டித்து வந்த உண்ணுவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தே யாழ். மாவட்டம் பூராவும் மாணவர்கள் அடையாள உண்ணுவிரதம் மேற்கொண்டதாக, மாணவர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

## "தனித்துவமான கவிதைகளை படைப்பவர் கல்வயல்"

[க. ஜீவகதாஸ்]

''விமர்சகர்கள் நாங்களல்ல; உண்மையான விமர்சகர்கள் குழந்தைகளும், அவர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுந் தான். இன்றைய சூழ்நிலையில் குழந்தைகளுக்காக இலக்கியம் படைப்பவர்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவர்களாவார்கள்.''

இவ்வாறு யாழ். இலக்கிய வட்டத்தின் ஆதரவில் நடைபெற்ற கல்வயல் குமாரசாமியின் ''பாப்பாப்பா'' என்னும் கவிதை நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய சொக்கன் குறிப்பிட்டார்.

விழாவிற்கு தலைமை தாங்கிய செம்பியன் செல்வன் தனது தலைமையுரையில் ''யாழ் இலக்கிய வட்ட எழுத்தாளர்கள் தனித்துவம் வாய்ந்தவர்கள் அவர்களுக்குள்ளே கவிஞர் கல்வயல் குமாரசாமி குறிப்பிடக்கூடியவராவார்.

அவர் எந்தக் கவிதை எழுதினுலும் அவை தனித்துவமான பார்வையும், சிறப்புக்களையும் கொண்டவையாகக் காணப்படுகின்றன. குழந்தைகளுக்காக இலக்கியம் படைப்போர் குழந்தைகளின் மன, அறிவு வளர்ச்சி என்பவற்றைக் கருத்தில் கொள்ளாது குழந்தைத்தனமான கவிதைகளையும் எழுதிவருவதுடன் அவற்றிற்கு விதிவிலக்காகக் கல்வயல் குமாரசாமியின் எழுத்துக்கள் விளங்குகிறது என்றார்.

மற்றும் க. சச்சிதானந்தம், மயிலங்கூடலூர் பி நடராசா ஆகியோரும் உரையாற்றினர்.

நூலாசிரியர் பதிலுரை வழங்கினர்.

## மாவட்டபுர....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கேசன்துறை நடேஸ்வராகல்லூரி, அமெரிக்க மிஷன்பாடசாலை, தெல்லிப்பளை வீமன்காமம் மகா வித்தியாலயம் ஆகியகல்லூரிகளைச் சேர்ந்த 3,000 மாணவர்களே உண்ணுவிரதம் அனுஷ்டித்தனர். பெருமளவு சிறுவர்களும், சிறுமிகளும் உண்ணுவிரதத்தில் பங்குபற்றினர்.

## ஊர்காவற்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவ் உண்ணுவிரதத்தில் 3,000க்கும் அதிகமான மாணவர்கள் கலந்துகொண்டனர். ஊர்காவற்றுறை முன்னுள் எம். பி திரு கா. பொ. இரத்தினம் உண்ணுவிரதத்தை ஆரம்பித்து முடித்துவைத்தார்.

## சாவகச்சேரி.....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கள் தாக்கப்பட்ட சம்பவங்களையும் கண்டித்து, சாவகச்சேரித்தொகுதிஉயர்தரவகுப்பு மாணவர்கள் சுமார் 2500 பேர் நேற்றைய தினம் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை சங்கத்தானை கந்த சுவாமி ஆலய முன்றலில் உண்ணுவிரதம் இருந்தனர்.

இவ் உண்ணுவிரதப் போராட்டத்தில சாவகச்சேரி இந்துக்கல்லூரி, டிறிபேக் கல்லூரி, மகளிர் மகா வித்தியாலயம், மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், மீசலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மாணவ, மாணவிகள் மிகவும் உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் பங்குபற்றியிருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது.

இதற்குமுன்னர் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவ, மாணவிகள் கல்லூரியில் இருந்து வெளிநடப்புச் செய்து கச்சாய் வீரபத்திரர் ஆலய முன்றலில் ஒன்றுகூடி அங்கிருந்து சாவகச்சேரி பிரதான வீதிவழியாக சுலோகஅட்டைகளையும் தாங்கி கோஷம் எழுப்பியவண்ணம், வந்தனர்.

அத்துடன், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், விக்கிணேஸ்வரா மகாவித்தியாலய மாணவ, மாணவியர்களும், சுலோக அட்டைகளைத் தாங்கியவண்ணம் பிரதான வீதி வழியாக கோசம் எழுப்பியவாறு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

நேற்றையதினம் சாவகச்சேரித் தொகுதிப் பாடசாலைகளில் பெரும் பான்மையானவற்றில் மாணவர்களின் வரவு மிகவும் குறைவாக இருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

## நேற்றுடன்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

போராட்டம் மூன்றும்கட்டத்துடன் நேற்றுமுடிந்தது அடுத்தநடவடிக்கை பற்றி மாணவர்கள் விரைவில் முடிவெடுப்பார்கள் என்று தெரிகிறது.

## முதல்உதவி...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

உதவிபற்றி பயிற்சி அளிக்கும் நோக்கத்துடன் யாழ். செஞ்சிலுவை சங்கத்தாருடன் இணைந்து காங்கேசன்துறை சுகாதாரப்பகுதியினரால் ஏழாலையில் முதல்முதலாக முதல்உதவிப் பயிற்சி அளிக்கப்பட்டது.

மேலும் மற்றும்பகுதிகளிலும் இப்பயிற்சி அளிக்கப்படவிருப்பதாக காங்கேசன் துறை சுகாதார அதிகாரி திரு தெய்வேந்திரம் தெரிவித்தார்.

## டியாகோ..

(4ம் பக்கத் தொடர்ச்சி)

காரீயமும் சுண்ணும்புக் கல்லும் நிறைந்த தீவு சிசெல்ஸ். மாலைதீவுக் கூட்டத்தைப் போன்று சிசெல்ஸ் தீவும் 86 தீவுகளைக்கொண்ட ஒருதீவுக் கூட்டமைப்பேயாகும். 1768ம் ஆண்டில் பிரான்சின் ஆட்சியின்கீழிருந்த சிசெல்ஸ் தீவுகள் 1794-ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் ஆட்சிக் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. 1814-ஆம் ஆண்டில் மொறிஷியஸ் தீவின் ஒரு பகுதியாக்கப்பட்டு பிரிட்டிஷாரின் நிர்வாகத்தில் இருந்தது. 1903ஆம் ஆண்டில் சிசெல்ஸ்தீவு தனியானஒருதீவாகப் பிரிட்டிஷாரின் நிர்வாகத்தினுல் பிரிக்கப்பட்டது. 1965 ஆம் ஆண்டில் சிசெல்ஸ் தீவுகள் பல தாமாகப்பிரிந்து கொண்டன.

1976-ஆம் ஆண்டு யூன் மாதம் 29ம் ஆம் திகதி சிசெல்ஸ் தீவு சுதந்திரம் பெற்றது. ஆனுலும் ஓராண்டுக்குள் அங்கு புரட்சிச் சதி யேற்பட்டு முதல் ஜனதிபதி கவிழ்க்கப்பட்டார்.

கறுவாவும் மின்சாரமும் உற்பத்தியாக்கும் சிசெல்ஸ் தீவில் மோட்டார் வாகனங்கள் தான் போக்குவரத்துச் சாதனங்கள் ஒரேயொரு தினசரிப்பத்திரிகைதான் இத்தீவில் வெளிவருகிறது.

சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த விக்டோறியா துறைமுகத்தில் யுத்தக் கப்பல்கள் வியத்நன் யுத்தக்கப்பல்கள் நிற்கின்றன. ஏவுகணைகளும் சோவியத் யுத்த விமானங்களும்தான் காட்சியளிக்கின்றன.

## தென்னங்கன்றுகள்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு விவசாய சேவை அலுவலர் பிரிவிலுள்ள பொது மக்களுக்கு நல்ல இன செவ்விளநீர்த் தென்னம்கன்றுகளை சகாய விலையில் வழங்குவதற்கான ஒழுங்குகளை பண்டத்தரிப்பு விவசாய சேவை அலுவலர் திரு வை. பாலசுப்பிரமணியம் மேற்கொண்டுள்ளார்.

# "எமது கல்வித் தேவைகளை நாமே பூர்த்தி செய்யவேண்டும்!"

(கரவெட்டி)

''மாணவர் போராட்டங்கள் பலமுறை பல அமைப்புகளாலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆனால் அது பூரண பலனைத் தந்ததாக வரலாறு இல்லை. மீண்டும். மீண்டும் தோல்வியடைந்த சத்வீகப் போராட்டங்களால் எமக்கு எப்பயனுமில்லை! மாறாக அரசுக்கும், சிங்கள மாணவர்களுக்கும் சவாலாக விளங்கிய தமிழ் மாணவரின் கல்வித் தகைமை பாதிக்கப்பட்டது.''

இவ்வாறு தீவிர மாணவரமைப்பு' என்று வெளியிடப்பட்டுள்ள துண்டுப்பிரசுரமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

''தோல்வியடைந்த போராட்ட வடிவங்களை விடுத்து, நாமே எமது கல்வித் தேவைகளைத் தீர்க்கப்பழகிக்கொள்ள அரசினால் குறைந்தபட்சம் முன்வைக்கப்படும் மாற்றுத் திட்டங்களைப் பயன்படுத்தி எமது திறமையால் நாம் எமது கல்வியில் ஏற்படும் இழப்புக்களை ஈடுசெய்யலாம்! அதுவரை எமக்கேற்படும் கஷ்டங்களை நாம் தாங்கத்தான் வேண்டும்.

## பண்டத்தரிப்பு ப. நோ. கூ. ச

# 13கிளைகளுக்கும் நிர்வாக உறுப்பினர் தேர்தல்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 13 கிளைகளுக்கும் நிர்வாக உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தலுக்கு நியமனப் பத்திரங்கள் கடந்த ஞாயிறு ஏற்றுக் கொள்ளப்பட்ட போது 10 கிளைகளுக்கு மட்டுமே நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டு போட்டி துவுமின்றி ஏகமனதாக தெரிவு நடைபெற்றது. இளவாலை, பெரியவிளான்' நுணசை ஆகிய மூன்று கிளைகளுக்கும் அன்றையதினம் நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்ய எவரும் முன்வரவில்லை. இதனால் இன்னொரு திகதிக்கு நியமனப்பத்திரங்கள் இந்த மூன்று இடங்களுக்கும் ஏற்றுக் கொள்ளப்படும் என்று, சங்கத் தலைவர் திரு ஆ. ஜேசுதாசன் தெரிவித்தார்.

கடந்த ஆண்டுகளில் கிளைகளின் உறுப்பினர் தெரிவுக்கு பலத்த போட்டி நிலவி வந்தது குறிப்பிடத்தக்கது. இம்முறை ஏகமனதான முறையிலேயே தெரிவு நடைபெற்றுள்ளது.

# பாதை மாறிய மினிபஸ்

## அடிக்கடி தொடரும் 'கதை'

[பச்சிலைப்பள்ளி]

யாழ் நகரிலிருந்து வவனியாவுக்குக் கடந்தவியாழக்கிழமை மாலை சென்று கொண்டிருந்த மினிபஸ் ஒன்று மாங்குளத்தில் வைத்து முல்லைத்தீவு பாதை நோக்கித் திருப்பப்பட்டது.

வான் ஒன்றுடன் சிவிலுடையில் நின்றவர்களே மினிபஸ்ஸை மறித்து பிரயாணிகளை வானில் ஏற்றிக்கொண்டு மினிபஸ்சுடன் முல்லைத்தீவுக்குச் சென்றுர்களாம்.

முல்லைத்தீவில் வைத்து மினிபஸ் பிரயாணிகளுடன் வவனியாவை நோக்கிச் செல்ல அனுமதி அளிக்கப்பட்டதாம்.

இப்பிரயாணிகளில் பெண்களும் இருந்தார்களாம்.

நேரம் இரவாகியதால் பிரயாணிகள் பீதியுடன் காணப்பட்டார்கள். வழிப் பாதுகாப்பிற்காக மினிபஸ்காரரிடம் கடிதம் ஒன்றும் கொடுசகப்பட்டிருந்ததாம். மினிபஸ் நள்ளிரவில் வவனியாவை வந்தடைந்ததாகக் கூறப்படுகிறது.

இந்த மாதிரிச் சம்பவம் தொடர்ந்து நடப்பதாகக் கூறப்படுகிறது.

## 25,000 ஏக்கரில் உழுந்து

(வவனியா)

வவனியா, செட்டிக்குளம், நெடுங்கேணி பகுதிகளில் இம்முறை 25 ஆயிரம் ஏக்கரில்உழுந்து பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளதாக வவனியா விவசாய இலாகா உயர்அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## இலவச வைத்திய சிகிச்சை

(கொழும்புத்துறை)

யாழ் லயன்ஸ் கிளப்பினரால் அரியாலைப் பகுதியில் வசதி குறைந்த பொது மக்களுக்கு இலவச வைத்திய சிகிச்சையளிக்கப்பட்டது. அரியாலை காந்தி சன சமூக நிலையத்தின் ஆதரவுடன் இவ் இலவச வைத்திய சிகிச்சை இடம் பெற்றது.

காது, மூக்கு. தொண்டை சண்நோயாளர்களுக்கு இவ் வைத்தய நிபுணர்சள் பரிசோதனைகளை மேற்கொண்டு சிகிச்சைகளை அளித்தனர். கண்பார்வை குறைந்தவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கவும் நடவடிககை யெடுக்கப்பட்டுள்ளது.

# ரூபவாஹினி

மாலை

| | |
|---|---|
| 5-30 | எ.பி.ஸி. உலக விளையாட்டுக்கள் |
| 6-25 | 'ரொம் அன்ட் ஜெரி, கார்ட்டூர்ன் சித்திரம் (ஆங்கிலம்) |
| 6-55 | செய்திகள் (தமிழ்) |
| 7-15 | 'கிரேட் எக்ஸ்பெக்ரேசன்ஸ்' சார்ள்ஸ் டிக்கண்ஸின் நாவல் சித்திரம் |
| 7-45 | தகவல் நிகழ்ச்சி |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 8-35 | 'ரன் கஹ வனு' நாடகம் (சிங்களம்) |
| 9-00 | 'ஜெபர்சன்ஸ்'- நகைச்சுவைச் சித்திரம் (ஆங்கிலம்) |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 10-00 | இசை நிகழ்ச்சி (சிங்களம்) |
| 10-30 | உலகச் செய்திகள் |
| 10-35 | நிகழ்ச்சிகள் முடிவு |

## குருளைச் சாரணர் விழா

[மாவிட்டபுரம்]

யாழ் மாவட்ட குருளைச் சாரணர் வருடாந்த விழா தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் இம்மாதம் 14-ந் திகதி நடைபெறவிருக்கிறது.

17 பாடசாலைகள் கலந்து கொள்ளும் இவ்விழாவை வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. சுப்பிரமணியம் ஆரம்பித்துவைப்பார்.

கல்வி அதிகாரி திரு. குலசேகரம் பரிசில்கள் வழங்குவார்.

## பேச்சுப்போட்டியில் முதலிடம்

(வவனியா)

வவனியா தமிழ் மகாவித்யாலய மாணவியான செல்வி பாலசிங்கம் அரசபாலினி வவனியா கல்வி வட்டாரம் அண்மையில் நடத்திய தமிழ்த் தினப் பேச்சுப்போட்டியில் முதலிடத்தைப் பெற்று அகில இலங்கைத் தமிழ்த் தினப் பேச்சுப்போட்டியில் பங்கு கொள்ள தகுதி பெற்றுள்ளார்.

# 'ஆழிக்குமரனுக்கு அரசு முத்திரை வெளியிடவேண்டும்!'

(கொழும்பு)

உலக சாதனைகள் பல செய்து சர்வதேச புகழ்பெற்ற ஆழிக்குமரன் ஆனந்தனுக்கு அரசு முத்திரை வெளியிட்டுக் கௌரவிக்கவேண்டும்.

இவ்வாறு அரசைக் கோரும் தீர்மானம் சர்வதேச புகழ் பெற்ற குமார் ஆனந்தன் நினைவுமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்திற்குத் திரு. அந்தனி ஜீவா தலைமைவகித்தார்.

ஆழிக்குமரன் ஆனந்தன் நினைவாக நினைவுமலர் ஒன்று வெளியிடுவது என்று கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

ஆழிக்குமரன் ஆனந்தன் நினைமன்ற நிர்வாகிகளாகக் கீழ்க்கண்டவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. ஏ. எஸ். பிலிப், துணைத்தலைவர் ஆர். அசோகன், செயலாளர் அந்தனிஜீவா, பொருளாளர் வி எம். ஈஸ்வரன், துணைப் பொருளாளர் எஸ். துரைசாமி.

## மனையியல் செய்முறைப் பரீட்சை:

# போக்குவரத்தினால் மாணவிகள் கஷ்டம்

[பச்சிலைப்பள்ளி]

கடந்த வாரம் வட பகுதியில் க. பொ த. உயர்தர வகுப்பு மாணவிகளுக்கெனக் கொழும்பில் நடைபெற்ற மனையியல் செய்முறைப் பயிற்சிக்குச் சென்ற மாணவிகள் போக்குவரத்துக் கஷ்டத்தினால் பெரிதும் பாதிப்படைந்தார்கள்.

பாதுகாப்பை முன்னிட்டுப் பெரும்பாலான மாணவிகள் பெற்றோருடன் ரயிலில் சென்றார்கள்.

கடந்த வார இறுதி நாட்களில் ரயில் நேரம் பிந்தி இரவு பதினொரு மணிக்குப் பின்னரே கோட்டைப் புகையிரத நிலையத்தை அடைந்தது.

இரவு நேரத்தில் கொழும்பை வந்தடைந்த மாணவிகளும் ஏனைய பிரயாணிகளும் புகையிரத நிலைய விருந்தையில் பீதிக்கும் குளிருக்கும் மத்தியில் விடியும்வரை விழித்திருக்க வேண்டி ஏற்பட்டதாம்.

புகையிரத நிலைய அதிகாரிகள் அவர்களைப் புகையிரதநிலையத்திற்குள் பயமின்றிப் பாதுகாப்பாக இருக்க அனுமதிக்கக் கூட மறுத்துவிட்டார்களாம்.

# வவனியா மாவட்டத்தில்

## 10 கல்வி வலயங்கள் உதயம்!

[பச்சிலைப்பள்ளி]

வவனியா கல்வி மாவட்டம் 1985 ஜனவரி மாதம் தொடக்கம் 10 கல்வி வலயங்களாகப் பிரிக்கப்படவுள்ளது.

இப்புதிய திட்டத்தின் அடிப்படையில் வவனியா நகரம், நெழுக்குளம், உழுக்குளம், பூவரசங்குளம், செட்டிகுளம், ஓமந்தை, நெடுங்கேணி, புளியங்குளம், மாமடுவ, ஈரப்பெரியகுளம் ஆகிய கல்வி வலயங்கள் உருவாக்கப்படவுள்ளது.

ஒவ்வொரு வலயங்களிலும் ஒரு பாடசாலை வலய முன்னணிப் பாடசாலையாக அமையும். அவற்றில் அவ் வலயப் பாடசாலைகளின் அதிபர் இருந்து கடமையாற்றுவார்.

வவனியாவிலுள்ள24 கிராம சேவையாளர் பிரிவிலுள்ள 125 தமிழ், சிங்கள, முஸ்லிம் பாடசாலைகள் இவ்வலயங்களில் அமையவுள்ளன

## இன்றைய பலன்

மாதம்—புரட்டாதி
திகதி—25 11-10-1984)
வாரம்—வியாழன்
திதி—பிரதமை காலை 7-53ன் மேல் துதியை
நக்ஷத்திரம்—அச்சுவினி முன் இரவு 10-21ன் மேல்பரணி

மேடம்:- பனக் கோட்டை கட்டுவீர்கள் எதிர்பார்த்ததில் ஏமாற்றம்விளையும் உடல்நலம் பாதிக்கப்படலாம் அபாயகரமான காரியங்களைத்தவிர்க்கவும்.

இடபம்:- அதிகாரப்பேறுக்கும் அதிகபொருள் வரவிற்கும் இடமுண்டு ஆக்கப்பணியிலும் அதிகம் ஈடுபடுவீர்கள் குடும்பத்திலும் மகிழ்ச்சி நிலவும்.

மிதுனம்:- சகோதரவழியால் மனதில்சஞ்சலம் தோன்றக்கூடும் உள்வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும் உஷாராக இருக்கவேண்டும்.

கடகம்:- ஆக்கப்பணியில் ஈடுபடுவீர்கள் பிறருடையஆதரவு தாராளமாகக் கிடைக்கும் தாய்வழி மூலம் நற்செய்தி கிடைக்கலாம்

சிங்கம்:- நீண்டநாள்கனவு இன்றுநனவாகும் பெரியவர்கள்உதவிதாராளமாகக்கிடைக்கும் புண்ணியவிருப்பு மேலிடும் புத்திரர்வழியாலும் சுபமுண்டு.

கன்னி:- எதிர்பாராதமுடிவுகள் ஏமாற்றத்தைத்தரலாம் எதிரிகளின் சூழ்ச்சி பலமாக இருக்கும் பழையநினைவுகள் துன்பத்தைக்கொடுக்கும் தனிவழிப் பயணத்தைத் தவிர்க்கவும்.

துலாம்:- காதலர்களுக்கு கற்கண்டானதினம் குடும்பத்தில் குதூகலம்தென்படும் உறவினர்களின் ஆதரவும் ஆசியும் கிடைக்கும்.

விருச்சிகம்:- விபத்துக்கு இடம் ஏற்படும் எதிலும்நிதானத்துடன் நடந்துகொள்ளவும் பலவழிகளிலும் பணம் செலவாகும் கடன்படவும் நேரிடும்

தனுசு:- பெருமையுடன் தலைநிமிர்ந்து வாழுவீர்கள் பிதாவழித் தனமும் சேரும் தானதருமங்களில் ஈடுபாடு ஏற்படும் பெரியோர்கள் ஆசி கூறுவார்கள்.

மகரம்:- வியாபாரவிருத்திக்கு இடமுண்டு வெளியிடத் தொடர்புகளில் முன்னேற்றம் சென்படும் புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும்.

கும்பம்:- நினைத்தகாரியத்தில் வெற்றியுண்டு எதிர்பாரத வகையில் உங்களுக்கு ஆதரவு பெருகும் பலகத்தவர்களை உங்களைப் பாராட்டச்செய்வார்கள்.

மீனம்;- கழுகுப்பார்வை உங்களைவட்டமிடும் வாகனம் செலுத்துவோர் அதிகநிதானத்துடன் இருக்கவும் பொறுமை, வேண்டும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## மண்டல பூர்த்தி விழா

[யாழ்ப்பாணம்]

யாழ். நீராவியடி கடையிற் சுவாமி சமாதிச் சிவாலய மண்டலபூர்த்தி விழா இம்மாதம் 15-ந் திகதி திங்கட்கிழமை நடைபெறும். இத்தினத்தில் மஹாஸ்நபனமாகிய சகஸ்ரசங்காபிஷேகமும் திருக்கல்யாணத்தைத் தொடர்ந்து சுவாமி வீதிவலம் வருதலும் நடம்பெறும்.

சங்காபிஷேகக் கிரியைகள் 14-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை ஆரம்பமாகின்றது.

சுவாமி பூந்தண்டிகையில் வெளிவீதி வரும்போது கடையிற் சுவாமிவீதி, நாவலர் விதி, கஸ்தூரியார் வீதி, கல்லூரி வீதிகளில் வந்தருளுவார்

[ப]

## மரம் நாட்டு விழா

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு அரசினர் கிராம வைத்தியசாலையில் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் மரம் நாட்டு வைபவம் நடைபெற்றது. வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் ரி. பகீரதன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் (செல்வி) எம். அற்புதநாதன், உதவி வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கணேசலிங்கம் ஆகியோர் மரக்கன்றுகளை நாட்டினர்.

## கீரிமலையில் சிறப்பாக நடக்கும் சாந்தி ஹோமம்

(மாவிட்டபுரம்)

புரட்டாதி கடைசிச் சனிக்கிழமையை முன்னிட்டு பிரசித்திவாய்ந்த கீரிமலை நகுலேஸ்வரசுவாமி கோவிலில் விசேட சாந்திஹோமம் பிரமாண்டமான முறையில்நடைபெற உள்ளது.

இவ்விசேட ஹோமத்தில் விசேடசாந்தி, திரவியஹோமம், திலஹோமம் அபிடேக ஆராதனைகள் ஆகியன இடம் பெற உள்ளதுடன் சனிக்கிரக தோஷ அர்ச்சனைகளும் இடம் பெறஉள்ளன.

சனிக்கிழமை தோஷ வழிபாட்டு காக கீரிமலைக்குவரும் பக்தர்கள் கண்டகி தீர்த்தமாடி விரதமனுஷ்டித்து எள் தீபமேற்றி வழிபாடற்றவேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக நகுலேஸ்வர ஆலய ஆதீனகர்த்தா பிரமஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள் தெரிவித்தார்

## ஓமானில் 'அபிராமியந்தாதி'

[சுழிபுரம்]

ஓமான் நாட்டில் தொழில் புரியும் இலங்கைத் தமிழர்கள் பலர், வழக்கம்பரை சன சமூக நிலைய வெளியீடான அபிராமியந்தாதி ஆய்வுரை நூல்களை அனுப்பிவைக்குமாறு நிலையச் செயலாளருக்கு ஐம்பதுக்கு மேற்பட்டவர்கள் கடிதமூலம் கேட்டுள்ளனர். ஏற்கனவே இங்கிருந்து சென்ற ஒருவர் சில பிரதிகளை அங்கு கொண்டு சென்று விநியோகித்ததன் பயனே இதுவாகும். நூற்றுக்கணக்கான பிரதிகளை அனுப்பி வைத்தால் பலர் பயனடைவார்கள் என்றும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராணி (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30,
சிவாஜி - ஜெயலலிதா
பட்டிக்காடா பட்டணமா

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 4-30 7-00
NIGHT SHIFT
(adults only)
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு)

ஹரன் (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30
சிவாஜி, பத்மினி நடித்த
நான் வணங்கும் தெய்வம்
புதிய பிரதி

சாந்தி (யாழ்நகர்)
10-30—2-30
சிவாஜி-கே. ஆர். விஜயா
சத்யசுந்தரம்
(கலர் - புதிய பிரதி)

மனோகரா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
ரஜனிகாந்த் சௌகார்ஜானகி
தீ
தீபாவளி வெளியீடாக
கே. பாலசந்தரின்
பூவிலங்கு

லிடோ (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00 6-15
சிவாஜி-விஜயா
ஊரும் உறவும்

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 4-30
Roger Moore in
THE SWITCH
(adults only)

முதல்தர 'திகில்' படம்
ரீகல் [யாழ் நகர்]
10 முதல்-(குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்)
10-30, 2-15, 4-30, 6-30
VISITING HOURS
விறுவிறுப்புடன் கூடிய திகிலூட்டி திடுக்கிட வைக்கும் இப்படத்தை இருதயம் பலவீனமானவர்கள் பார்ப்பதை தவிர்க்கவும்.
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.

ராஜா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00 4-30 — 6-45
Every lovers should see this film!
Willie games......
Phoebe crates
PARADISE
(Color) strictly for adults)
கண்டிப்பாக 17 வயதுக்குட்பட்டவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்

வின்ஸர் [யாழ்.]
தினசரி 10-30, 2-00, 4-30. 6-30
புரூஸ் லீ யின் வாழ்க்கையில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த
"BIG BOSS"
தொடக்கம் முதல் முடிவு வரை நாடி துடிக்கும் உள்ளத்தில் ஒரு கிளுகிளுப்பை ஊட்டும் விறுவிறுப்பான கராட்டி சண்டைகள் நிறைந்த காட்சிகள்.
(புத்தம் புதிய பிரதி)


## கீரிமலையில்

# வீதித்தடை நீங்கியது!

## பாதுகாப்புப்படை வெளியேற்றம்!!

[மாவிட்டபுரம்]

கீரிமலைப் பகுதியில் நிலவி வந்த பதற்றநிலை நீங்கி, வீதித் தடைகளும் அகற்றப்பட்டுள்ளதால் புண்ணிய ஸ்தலமான கீரிமலைக்குச் செல்வோர் தொகை அதிகரித்துள்ளது.

கீரிமலைப்பகுதியில் கடந்த சில வாரங்களாக பதற்றநிலை நிலவியதால் அங்குள்ள பொது மக்கள் பெரிதும் பயத்துடன் நடமாட நேரிட்டது. அத்துடன் அந்தியேட்டிக் கிரியைகளுக்காகவும், பிதிர்க்கடன்களை நிறைவேற்றுவதற்காகவும் வெளியிடங்களிலிருந்து அங்கு செல்வோரும் அதனைக் கைவிட நேர்ந்தது.

ஆனால் தற்போது மாவிட்டபுரம்–கீரிமலை வீதியில் போடப்பட்டிருந்த வீதித்தடையும் நீக்கப்பட்டு அவ்வீதியில் அமைந்துள்ள கிணற்றுக்குக் காவல் இருந்த பாதுகாப்புப் படையினர் அங்கிருந்து வெளியேறியுள்ளதால் கீரிமலைப்பகுதி சகஜநிலைக்குத் திரும்பியுள்ளது.

தற்போது புரட்டாதி சனிக்கிழமை விரதம் அனுஷ்டித்து வருபவர்களும், சனிக்கிரதோஷ வழிபாட்டுக்காக கீரிமலை சிவன்கோவில், கிருஷ்ணன் கோவில் ஆகியவற்றுக்குச் செல்ல ஆரம்பித்துள்ளனர். புரட்டாதி இறுதி சனிக்கிழமையை முன்னிட்டு பக்தர்களின் வசதிக்காக கீரிமலையில் பல விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கீரிமலை தற்போது சகஜ நிலைக்குத் திரும்பியுள்ளதால் வெளியிடங்களிலிருந்து அங்கு வரும் பக்தர்களின் தொகையும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது பஸ் சேவைகளும் கீரிமலைக்கு போதியளவு இடம்பெற ஆரம்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## கீரிமலை நகுலேஸ்வரர் இலட்சார்ச்சனை

(பண்டத்தரிப்பு)

கீரிமலை அருள்மிகு நகுலேஸ்வரர் ஆலயத்தில் மகாருத்திர யாகமும் கேதார கௌரி விரத இலட்சார்ச்சனையும் கடந்த 4ம் திகதி தொடக்கம் ஆரம்பமாகி நடை பெற்று வருகிறது இம்மாதம் 24ம் திகதி புதன் கிழமை வரைநடைபெறவுள்ள இந்த நிகழ்ச்சிகளில் தினமும் முற்பகல் 9 மணி தொடக்கம் 3 மணிவரை அருள் மிகு ஸ்ரீ நகுலேஸ்வரபெருமானுக்கு மகா ருத்திர அபிஷேகமும் ஸ்ரீ ருத்திர அர்ச்சனையும், நகுலாம்பிகா தேவிக்கு விஷேட அபிஷேகமும், இலட்சார்ச்சனையும் இடம் பெறறு வருகின்றது.

## அத்திபாரக்கல் நாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி தெற்கு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய தேர்முட்டி கட்டுவதற்குரிய அத்திபாரக்கல் நாட்டு விழா திரு கி துரைராஜா தலைமையில் நடைபெற்றது:

திரு. செல்லையா மங்கள தீபம் ஏற்றினர். ஆலயதிருப் பணிச்சபைத் தலைவர் திரு. க. சண்முகம் அத்திபார நாள் சங்கை வைத்தார். திரு. மா. சின்னத்தம்பி அத்திபாரக்கல்லை நாட்டினர். திரு மு. கந்தசாமி ஆசியுரை வழங்கினர்.

## கரபந்தாட்டப் போட்டி

[கிளிநொச்சி]

கிளிநொச்சி திருநகர் விளையாட்டுக் கழகத்திற்கும் உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற சினேகபூர்வமான கரபந்தாட்டப்போட்டியில் திருநகர் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது மத்தியஸ்தராக திரு. நாயகம் சிற்றம்பலம் கடமையாற்றினர்.

## அரிசி ஆலை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யாளருக்கு ஆலோசனை கூறியுள்ளார்.

'ராணிமில்' 'தங்கவேல், மில் ஆகிய இரு அரிசி ஆலைகளிலும் அண்மையில் நடந்த கொள்ளையினை அடுத்து வவனியா பொலிஸ் அதிபர் இங்குள்ள அரிசி ஆலை நிர்வாகிகளை தனது காரியாலயத்துக்கு அழைத்து குறித்த ஆலோசனையினை வழங்கியுள்ளார்.

கூடுதலான பணத்தினை அரிசி ஆலைகளில் வைத்திருக்கக் கூடாது என்றும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# இளம் பெண் சுருக்கிட்டு தற்கொலை

(வவனியா)

பிரான்ஸ் சென்ற காதலன் கடிதம் எழுதாததினால் 22 வயதுடைய இளம் யுவதி மாமரத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துள்ளார்.

இச் சம்பவம் ஓமந்தை சேமமடுவில் நடந்துள்ளது. ஆனைக்கோட்டையைச் சேர்ந்த உதயகுமாரி என்ற பெண்ணே தற்கொலை செய்தவராவார்.

இவரது மரணம் தொடர்பான விசாரணையை வவனியா திடீர் மரண விசாரணை அதிகாரி டாக்டர் எஸ்.கே. பாலசிங்கம் நடத்தினர்.

விசாரணையின்போது தெரிய வந்ததாவது;

''இறந்தவர் ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவர். சேமமடுவிலுள்ள இவரது பேர்த்தியுடன் கடந்த ஒரு வருடகாலமாக வசித்து வந்தவர்.

''இறந்தவருக்கு காதலன் ஒருவன் இருந்தாராம். இவர் வெளிநாட்டில் வேலை பெற பிரான்சுக்குச் சென்றுள்ளார்,

பிரான்சுக்குச் சென்றபின் இறந்தவருக்குக் கடிதம் போடுவதனை நிறுத்திக் கொண்டாராம்.

அதே வேளையில் பிரான்ஸிலுள்ள இறந்தவருடைய காதலனுக்கு அவருடைய பெற்றோர் வேறு ஒரு இடத்தில் திருமணம்செய்ய முயற்சிகள் நடந்துள்ளதை கேள்விப்பட்டு சுருக்கிட்டுத்தற்கொலை செய்துள்ளார் என்பது சாட்சிகளின் மூலம் தெரிய வந்தது;

இறந்தவருடைய தகப்பன் மு. தியாகராஜா, பேர்த்தி அ. சின்னப்பிள்ளை மாமன் அ. தேவராஜா ஆகியோர் விசாரணையின் போது சாட்சியமளித்துள்ளனர்.

பிரேதபரிசோதனையினை வவனியா மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். நிரஞ்சன் மேற்கொண்டார்.

சாட்சிகளை வவனியா ஆஸ்பத்திரி பொலிஸ் அதிகாரி திரு. கே. நவரட்ணம் ஆஜர் செய்தார்.

தற்கொலை மரணம் என தீர்ப்பளிக்கப்பட்டது.

## புதிய சில்லறை விற்பனை நிலையம்

(பண்டத்தரிப்பு)

ஸ்ரீ லங்கா கூட்டுறவு சந்தைப் படுத்தும் சம்மேளனத்தின் யாழ் பிரதேச அலுவலகம் இப் பகுதியிலுள்ள பாவனையாளர்களினதும் விவசாயிகளினதும் நலன் கருதி புதிய சில்லறை விற்பனை நிலையம் ஒன்றை யாழ். பிரதான வீதியில் கடந்த வாரம் ஆரம்பித்துள்ளது,

நாட்டின் ஏனைய மாவட்டங்களில் இது போன்ற கிளை விற்பனை நிலையங்கள் ஏற்கனவே இயங்கி வந்த போதிலும் யாழ் மாவட்டத்தில் இப்போது தான் இந்த விற்பனை அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது.

## ஆரம்பசுகாதார நிலையங்கள்

(பச்சிலைப்பள்ளி)

பளைப்பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சோரன்பற்று, கிளாலி ஆகிய இடங்களிலேயே இச் சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குழந்தைகள், கர்பிணித் தாய்மார் ஆகியோருக்கு சிகிச்சைகள் அளிக்கப்படுவதுடன், பொதுவைத்தியங்களும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் அளிக்கப்படுகின்றன.

## வேலையிலிருந்து நீக்கப்பட்டனர்

[கல்வியங்காடு]

யாழ். மாநர சபையின் மராமத்துப் பகுதியில் கடமை புரியும் வீதி வேலைத் தொழிலாளர்கள் சிலர் வேலையினின்றும் நிறுத்திவைக்கப் பட்டுள்ளனர்.

இப்படியாக வேலையினின்றும் நிறுத்திவைக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள் அண்மையில் யாழ் மாநகர சபையினரால் நேர்முக பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களாவர்.

## கொங்கொங் கப்பல் தாக்கப்பட்டது

(பக்தாத்)

கடந்த திங்கட்கிழமை ஈராக்கின் ஜெட் விமானத் தாக்குதலுக்கு இலக்காகிக் கடலில் எரிந்து கொண்டிருந்த கப்பல் கொங்கொங்குக்குச் சொந்தமானதாகும்.

இந்தக் கப்பல் தாக்கப்பட்டதில் 2 பிரிட்டிஷ் அதிகாரி உட்பட 6 பேர் பலியானுர்கள்.


[சூ]

# சிறந்த கிரிக்கெட் கோஷ்டியாக சென். ஜோன்ஸ்


(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ரீதியில், 19-வயதுக்குட்பட்ட பாடசாலை கிரிக்கெட் கோஷ்டிகளிடையே 'பாட்டா' ஆதரவில் நடாத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில், வடமாகாணத்தில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி சிறந்த கோஷ்டியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சென. ஜோன்ஸ் கல்லூரிக் கிரிக்கெட் கோஷ்டி மேற்படி போட்டியில் வடமாகாணத்தில் மொத்தம் ஐந்து போட்டிகளில் கலந்துகொண்டது. இவற்றில் மூன்று போட்டிகளில் இன்னிங்ஸ் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. குறிப்பிடத் தக்கது. இரண்டு போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன.



சிறந்த இளம் கிரிக்கெட் வீரர்களைக்கொண்ட சென். ஜோன்ஸ் கல்லூரிக் கிரிக்கெட் கோஷ்டிக்கு வீரர் திரு. பி. திருக்குமார் தலைமை தாங்கினர்.



உச்சிவெய்யிலையும் பொருட்படுத்தாது மாணவிகள் நேற்று யாழ். சென் ஜேம்ஸ் தேவாலயத்திற்கு முன்னுல் உண்ணுவிரதமிருக்கும் காட்சி.

## 'லலித்' சந்திப்பு
# அதிபர்குழு நேற்று கொழும்புசென்றது

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி மாணவர்கள் கோரிக்கைதொடர்பாக தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியை நாளை வெள்ளிக்கிழமை கொழும்பில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக, அதிபர்கள் குழு நேற்று நண்பகல் புறப்பட்டது.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம் பிள்ளை தலைமையில் இக்குழு சென்றுள்ளது.

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தையும், இராணுவத்தையும், வேறு இடத்திற்கு மாற்றி, கல்லூரிகளை நடத்த வேண்டும் என்று மாணவர்கள் அரசாங்க அதிபரைச் சந்தித்து கோரியிருந்தனர்.

அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம், அமைச்சர்-அதிபர்கள் குழு சந்திப்புக்கான ஏற்பாட்டை செய்திருந்தார் (க)

# சட்ட, லோ:க சபைகளுக்கு ஒரேநேரத்தில் தேர்தல்!
## நெடுஞ்செழியன் விருப்பம்

(சென்னை)

தமிழ்நாடு சட்டப்பேரவைக்கும், லோகசபைக்கும் ஒரேசமயத்தில் தேர்தல் ந த்தப்பட வேண்டுமென்று தமிழ்நாடு நிதியமைச்சர் திரு. ஆர் நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக தமிழ்நாடு அரசுதனது கருத்தை இந்திய மத்தியஅரசுக்கு கடிதமூலம் தெரியப்படுத்தியுள்ளதென்றும் அவர் கூறினுர்.

## எம். ஜி. ஆர் உடல்நிலை

தமிழ்நாடு முதலமைச்சரின் உடல்நிலை தேறிவருவதாக சுகாதார அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே தமிழ்நாடு சட்டப்பேரவையில் நேற்றுத் தெரிவித்தார். (வெ)


## மரண அறிவித்தல்
### ஆறுமுகம் இளையதம்பி

குரும்பசிட்டி. ஆறுமுகம் இளையதம்பி காலமானுர். இவர் மனோன்மணியின் அன்புக் கணவரும் ஞானசக்தி, பராசக்தி, ஜெயசக்தி, நவசக்தி, கிரியாசக்தி, வவுனியா கருணுமூர்த்தி அன் கொம்பனியைச்சேர்ந்த சிவமூர்த்தி, கருணுமூர்த்தி, இரவிமூர்த்தி, கணேசமூர்த்தி, ச வகச்சேரி சிவமூர்த்தி அன் கொம்பனியைச் சேர்ந்த சிவராசமூர்த்தி, மாங்குளம் தவயோகன்ஸ் விஜயகமூர்த்தி, குகமூர்த்தி [ஜேர்மனி] ஆகியோரின் த ப்பனுரும் கெக்கிருவ சோமசுந்தரம், விஸ்வலிங்கம், செல்லையா, சின்னப்பிள்ளை, திருப்பதி, அன்னமுத்து, அன்னலட்சுமி ஆகியோரின் சகோதரரும் வருமானவரிப்பகுதி குணநாயகம், கற்றன் நாஷனல் வங்கி சதானந்தமூர்த்தி, சர்வானந்தன், ரோஸ்மலர், சுசிலாதேவி, கௌசலாதேவி, ஆகியோரின் மாமனுரும் ஆவார்.

இவரது ஈமச் சடங்குகள் 11ம் திகதி வியாழக்கிழமை மாலை 2 மணிக்கு குரும்பசிட்டியில் நடைபெறும். உற்றுர் உறவினர் நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும். [142]

## மரண அறிவித்தல்
### திருவாளர் கிட்டிணசாமி சிவசுப்பிரமணியம்
(In Service Advisor)
கல்விப் பகுதி யாழ்ப்பாணம்

உடுப்பிட்டிவாசியும் காலம் சென்றவர்களின் திரு. வ. கிட்டிணசாமியினதும் திருமதி தையல்நாயகியினதும் மகன் திருவாளர் சிவசுப்பிரமணியம் அவர்கள் புதன்கிழமை காலமாகிவிட்டார். திருமதி பவளம் (Anitha Dress Making Institute) அவர்களின் அன்புக்கணவரும், செல்விகள் கிருசாந்தி, அனித்தா, செல் ன் கோகிலன் அவர்களின் அன்புத் தந்தையும், திருவாளர்கள் கி ஆனந்தகணேசன், (ஓய்வுபெற்றவர் நிலவளவைப் பகுதி) கி. ஆனந்தசுந்தரம் (கட்டிடப்பகுதி யாழ்ப்பாணம்), கி சண்முகசுந்தரம் (நீர்ப்பாசனப் பகுதி கொழும்பு), திருமதி பாக்கியலட்சுமி பஞ்சாட்சரம் அவர்களின் சகோதரரும், திரு முத்துவேலு பஞ்சாட்சரம் அவர்களின் மைத்துனரும் திரு க. துரைஐயா, திருமதி து சிவக்கொழுந்து அவர்களின் மருமகனும், திருவாளர்கள் து. விஜயரட்ணம். து மகாலிங்கம் (mini) து பாலரஞ்சித் (லண்டன்), து ரஞ்சித்குமார். (யப்பான்) திருமதி பரமேஸ்வரி தம்பிராசா, திருமதி தையல்நாயகி தய னந்தன், திருமதி சரோஜினி நடராசா (Betswarna) அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அ ஞரது பூதவுடல் வண்ணுர்பண்ணை 50. அரசடி வீதியிலுள்ள இல்லத்தில் 11-10-84ம் திகதி இன்று வியாழக்கிழமை ஈமைக் கிரிகைகள் நடைபெற்று பிற்பகல் 4 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்திற்கு தகனக்கிரிகைக்காக எடுத்துச் செல்லப்படும் இத்தகவலை உற்றுர் உறவினர் நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும். 143


## வான் கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள இளைப்பாறிய டாக்டர் ஒருவரின் வான் ஒன்று சில தினங்களுக்கு முன் துப்பாக்கிமுனையில் இளைஞர்களால் கடத்தப்பட்டது.

டாக்டர், தமது வீட்டிலிருந்தபோது 6 இளைஞர்கள் வந்து இருவர் வெளியில் நிற்க நால்வர் உள்ளே சென்று வானை கேட்டதாகவும், பின் கடத்திச்சென்றதாகவும் கூறப்படுகிறது,

மறுநாள் காலையில் கொண்டு வந்து தருவதாக இளைஞர்கள் கூறிச்சென்றதாகவும் கூறப்படுகிறது

இதுவரைவான் டாக்டருக்கு கிடைக்கவில்லை என்றும் கூறப்படுகிறது. இதுபற்றி யாழ். பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது. (க)

## யாழ். பல்கலைக்கழக மாணவர் வங்கிக்கடன்

[யாழ்ப்பணம்]

வங்கிக்கடன்களை இதுவரை பெருத யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், அக்கடன்களை இம்மாதம் 24ம் 25ம் திகதிகளில் இலங்கைவங்கியிலும் இம்மாதம் 31ம் திகதிவரை எல்லா நாட்களிலும் மக்கள் வங்கியிலும் பெற்றுக்கொள்ளலாமென யாழ் பல்கலைக்கழக உதவிப்பதிவாளர் தெரிவித்துள்ளார். (வெ)

## மின்சாரம் தாக்கி மரணம்

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் 20 வயது இளைஞன் ஒருவர் மின்சாரம் தாக்கி மரணமானுர்.

பண்ட்த்தரிப்பைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி பாஸ்கரன் [20 வயது] காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் வேலையில் இருக்கும்போது மின்சாரம் தாக்கி மரணமானுர்

இவரின் மரணம் குறித்த தெல்லிப்பளை மரண விசாரணை அதிகாரி திரு என் தம்பிராசா விசாரணை நடாத்திய போது கந்தசாமி காந்தரூபன் தெல்லிப்பளை வைத்தியசாலை வைத்திய அதிகாரி கதிரவேற்பிள்ளை ஆகியோர் சாட்சியம் அளித்தபின் விபத்து மரணம் என தீர்ப்பு வழங்கப்பட்டது. [கி]

# தனியார் கம்பனியில் நேற்று நடந்த கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

இறால், கணவாய், சிங்க இறால் போன்றவற்றை பதனிட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கும் நிறுவனம் ஒன்றிலிருந்து இயக்கத்தின் பெயரைச் சொல்லி 2லட்சத்து 16ஆயிரம் ரூபா துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கைதடி நாவற்குழிப் பகுதியிலிருக்கும் 'அன்றீஸ்' கம்பனி லிமிட்டெட் ஸ்தாபனத்திலேயே இக்கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றது

நேற்றுக் காலை 10-45 மணியளவில், காரொன்றில் வந்திறங்கிய இனந்தெரியாத 8 பேர், இக்கொள்ளையில் ஈடுபட்டதாக சாவகச்சேரிப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கைக்குண்டுகள், கைத்துப்பாக்கிகள் சகிதம் புகுந்த அக்கோஷ்டியினரின் நான்கு பேர் மேல்மாடிக்குச் சென்று காசாளரைப்பயமுறுத்தி இரும்புப் பெட்டியைத்திறந்து, கொண்டுவந்த பாக்ஒன்றுக்குள் 2,16.000 ரூபாவையும் போட்டுக்கொண்டு சென்றுவிட்டார்களாம்.

கடந்த செப்டம்பர் மாதம் 24ம் திகதி மேற்படி கம்பனியில் இருந்த வயர்லஸ் கருவியையும், பாதுகாப்புக்கருதி இராணுவத்தினர் எடுத்துச் சென்றது தெரிந்ததே.

இக்கம்பனியில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 500 பேர் தொழில் புரிவதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது, (மா)

# இலங்கைத் தமிழ் இளைஞர்கள் நெதர்லாந்திலிருந்து அனுப்பப்படுவார்களா?

(க. ஜீவகதாஸ்)

''இலங்கையில் இப்போது நிலைமை வழமைக்குத் திரும்பிவிட்டது. ஆதலால் நெதர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள 130 தமிழ் இளைஞர்களும் மிக விரைவில் அனுப்பப்படுவார்கள்''.

நெதர்லாந்து அரசாங்கம் இந்தமுடிவை எடுத்துள்ளதாக அந்நாட்டு நீதிஅமைச்சு வட்டாரங்களிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேநேரத்தில் நெதர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள 130 தமிழ் இளைஞர்களும் ஒன்றிணைந்து இலங்கைத் தமிழர் சங்கம் என்னும் பெயரில் ஒரு அமைப்பினை அண்மையில் உருவாக்கியுள்ளனர் எனவும், இச்சங்கத்தினர் நெதர்லாந்து அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து தமக்கு அரசியல் தஞ்சம் வழங்கப்பட வேண் ம் என்பதற்கான காரணங்களை விளக்கவுள்ளனர் எனவும் அறியப்படுகின்றது.

## வாகனங்கள் சோதனை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாநகரசபை, நீதிமன்றம் மத்திய கல்லூரி, ஆகியவற்றைச் சுற்றியுள்ள வீதிகளில் சென்றவாகனங்கள் நேற்றுக்காலை பலத்தசோதனைக்குட்படுத்தப்பட்டது.

இ சோதனையின்போது, மாநகரசபை ஊழியர் ஒருவர் உட்பட மூவர் விசாரணைக்கு அழைத்து செல்லப்பட்டனர். அடையாள அட்டைஇல்லாதவர்கள், விசாரணை செய்யப்பட்டனர். நேற்றுக்காலை 7 மணிமுதல், இச்சோதனைகள் ஆரம்பமாகின. (க)

சர்வகட்சி மாநாடு

## ஐ. தே. க. குழு ஜனுதிபதியை சந்தித்தது!

[கொழும்பு]

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகள் குழுவொன்று பிரதம மந்திரி திரு ஆர் பிரேமதாசா தலைமையில் ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை சந்தித்து, சர்வகட்சி மகாநாடு பற்றி பேச்சுவார்த்தை நடத்தியது. [இ—வெ]

## முதல் உதவி பயிற்சி

(மாவிட்டபுரம்)

யாழ். செஞ்சிலுவை சங்கத்தினருடன் இணைந்து காங்கேசன் துறை சுகாதாரப் பகுதியினர் முதல்உதவி பயிற்சி அளித்துவருகின்றனர்.

பொது மக்களுக்கு முதல்

(5-ம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவுடன் தொடர்பு துண்டிப்பு

[நெடுந்தீவு]

நெடுந்தீவு தபாலகத்திலிருந்த தொலைத்தொடர்புச் சாதனங்கள் நேற்று முற்ருக கழற்றிச் செல்லப்பட்டன.

கடற்படையினரின் பாதுகாப்புடன் தொலைத்தொடர்புப் பகுதியினர் இந்த உபகரணங்களை அகற்றினர்

யாழ்ப்பாணத்திலிருந்து நெடுந்தீவுக்கு நேரடித் தொலைத்தொடர்பு வசதி முன்னர் இருந்தது குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகை ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம். சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu B 100236 81 Eelanadu P. O. Box 49, Telegramnumber Telephone 22389 - 24126.